விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

MoneyGram
WESTERN UNION WU
Ria
Moving Money for better
உறவுகளிடமிருந்து
Western Union,
MoneyGram, Ria மூலம்
அனுப்பிய பணத்தை
ஒரு சில நிமிடங்களில்
நீங்கள் பெற்றுக் கொள்ள...
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு
துரித தபால்கள்,
பொதிகள் சேவை
உடனுக்குடன்
அனுப்ப...
இலவயனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com
(C-2124)

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 வைகாசி 03 திங்கட்கிழமை (17.05.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 149

## ஜூன் மாதத்தில் கோவிட் பரவல் உச்சமடையலாம்

### பேராசிரியர் ஹேமந்த எச்சரிக்கை

(கொழும்பு)
எதிர்வரும் ஜூன் மாதத்தில் கோவிட் - 19 வைரஸ் தொற்று நோய் பரவல் நிலைமை அதிகரிக்கும் ஆபத்து காணப்படுவதாக கொழும்பு பல்கலைக் கழகத்தின் மகப்பேறு மற்றும் பெண்நோ 15

## முள்ளிவாய்க்கால் இனப் படுகொலையின் 12ஆவது நினைவு தினம் நாளை

### ஒன்றுகூடுவதைத் தவிர்த்து நினைவேந்தலை முன்னெடுப்போம் - தமிழ்க் கட்சிகள் அழைப்பு




03ஆம் பக்கம் பார்க்க

## முழுநேரப் பயணக் கட்டுப்பாடு நீக்கப்பட்டது

# அடையாள அட்டை நடைமுறை இன்று முதல் அமுலில் இருக்கும்

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண அறிவிப்பு



- இன்று முதல் 31ஆம் திகதிவரை அடையாள அட்டை நடைமுறை அமுலில் இருக்கும்.
- வேலைக்குச் செல்பவர்களுக்கு அடையாள அட்டை நடைமுறை பொருந்தாது.
- மாகாணங்களுக்கு இடையேயான கட்டுப்பாடுகள் தொடர்ந்தும் நீடிக்கும்.
- இரவு 11 மணிமுதல் அதிகாலை 4 மணிவரை நாடு முழுவதும் பயணக் கட்டுப்பாடுகள்.

முன்னர் அறிவிக்கப்பட்டவாறு இன்று திங்கட்கிழமை அதிகாலை 4 மணி முதல் பயணக் கட்டுப்பாட்டில் மாற்றங்கள் கொண்டுவரப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரி 15

## கொரோனாவால் மேலுமொரு கர்ப்பவதி உயிரிழப்பு

(கொழும்பு)
கோவிட் - 19 நோய்த் தொற்றால் 15

## வெசாக் வாரத்திலும் பயணக் கட்டுப்பாடுகள்

### நாடு முழுவதும் விதிக்கப்படலாம்

(கொழும்பு)
எதிர்வரும் வெசாக் பண்டிகை வாரத்தில் நாடு முழுவதும் பயணக் கட்டுப்பாடுகளை விதிக்க வாய்ப்புள்ளதாக அரசாங்கத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.
தற்போது விதிக்கப்பட்டுள்ள பயணக் கட் 15

### முல்லைத்தீவில் 20 பேர் உட்பட

## 55 வடக்கில் நேற்றும் பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண மாவட்டத்தில் 9 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் மேலும் 55 பேருக்கு கொரோனாத் தொற்றுள்ளமை நேற்று ஞாயிற்றுக்கிழமை கண்டறியப்பட்டுள்ளது என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். 15

## கொரோனாவால் நேற்றும் 21 பேர் உயிரிழப்பு

### 2,275 பேருக்கு தொற்று

(கொழும்பு)
கொரோனாத் தொற்றுக்கு உள்ளான மேலும் 21 பேர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு குறித்த அறிவிப்பினை 15

### செம்மணிப் பகுதியிலுள்ள

## வீடொன்றினுள் புகுந்து கும்பல் தாக்குதல்

**3 பேர் காயம்**

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் புதிய செம்மணி வீதியில் உள்ள வீடொன்றினுள் அத்து 15

## பொத்துவிலில் துப்பாக்கிச் சூடு ஒருவர் பலி

(பொத்துவில்)
பொத்துவில் உடும்பன் குளம் செல்வவெளி வயல் பகுதியில் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி 15

ஜோதிடக் கலாமணி
**சிவல்புரி சிங்காரம்**
எழுதும்
**வைகாசி மாத இராசி பலன்கள்**

## தொற்றாளர்களுக்கு வீடுகளில் சிகிச்சை வழங்கினால் மேலும் தொற்று அதிகரிக்கும்

### பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை



(கொழும்பு)
கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்கு வீட்டில் சிகிச்சையளிப்பது பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் என்பதோடு மேலும் தொற்றாளர்கள் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.
கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்ட போதிலும், நோய் அறிகுறிகள் 15

### விசேட கண்காணிப்பில்

## தருமபுரம் கிராம அலுவலர் பிரிவு

(முறிகண்டி)
கிளிநொச்சி மாவட்டத்தின் தருமபுரம் கிராம சேவையாளர் பிரிவு விசேட கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. 15


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரும்பிராய் பகுதியில் விபத்து

(உரும்பிராய்)

உரும்பிராய் காளி கோவிலுக்கு அருகில் பலாலி வீதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் முதியவர் ஒருவர் உள்ளிட்ட இருவர் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவத்தில் சைக்கிளும், மோட்டார் சைக்கிளும் கடும் சேதமடைந்துள்ளது. (ஞா-18 )

# கண்ணீர் அஞ்சலி



எமது நண்பன்

**திரு. ச. ஜனார்த்தனன்**

( சிரேஷ்ட உதவி முகாமையாளர், பிராந்திய தொலைத்தொடர்பு அலுவலகம், யாழ்ப்பாணம் )

அவர்களின் அன்புத் தந்தையார்

திரு.

## க. சு. சண்முகநாதன்

[ ஓய்வுபெற்ற வருமானவரி உத்தியோகத்தர் ]

அவர்கள் காலமான செய்தி அறிந்து துயரமடைகின்றோம். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*- ஓம் சாந்தி -*

**வலம்புரி நண்பர்கள்**

# 24 மணி நேரத்திற்குள் கொரோனாத் தொற்றால் திருமலையில் ஐவர் பலி

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் கொரோனாத் தொற்றுக்குள்ளான மேலும் ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர். குறித்த தகவலை கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ.ஆர்.எம். தௌபீக் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை 10 மணி வரையான 24 மணி நேரத்திலேயே குறித்த ஐவரும் உயிரிழந்துள்ளதாக தெரிவித்துள்ள அவர் அதேகாலப் பகுதியில் 55 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப் பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த மாதத்தில் 709 பேருக்கு தொற்று உறுதியாகியுள்ளதாகவும் தௌபீக் மேலும் தெரிவித்தார். (ஞா)

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி மதுபான விருந்து நடத்திய ஆறு பேர் நேற்று கைது

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி நேற்று முன்தினம் முதல் நேற்று மதியம் வரை மதுபான விருந்தை நடத்திக் கொண்டிருந்த 6 பேர் கைது செய்யப் பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மேல் மாகாண தெற்கு விசேட குற்றப் பிரிவினர் வெலிகடை பொலிஸ் பிரிவின் இராஜகிரிய பிரதேசத்தில் விடுதி ஒன்றில் நேற்று மதியம் இவர்களை கைது செய்துள்ளனர்.


கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் ஒருவர் கண்டி, அம்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் அவரிடம் இருந்து 5 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் அஜித் ரோஹண கூறியுள்ளார். அத்துடன் கைது செய்யப்பட்டவர்களில் ஒரு சந்தேகநபர் கைது செய்வதற்கான இரண்டு பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டிருந்தவர் எனவும் அவர் கிரிவத்துடுவ பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் தெரியவந்துள்ளது.

சம்பவம் குறித்து மேல் மாகாண தெற்கு விசேட குற்றப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட 6 பேரில் இருவர் பெண்கள் எனவும் இவர்களுக்கு தங்குமிடத்தை வழங்கிய விடுதி முகாமையாளரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஞா)

# மரண அறிவித்தல்

மண்ணில் 05 - 09 - 1931



விண்ணில் 16 - 05 - 2021

## கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் சண்முகநாதன்

(ஓய்வுபெற்ற வருமானவரி உத்தியோகத்தர் - உள்நாட்டு இறைவரித் திணைக்களம், முன்னாள் உப தலைவரும் பரம்பரை தர்மகர்த்தாவும் - சுதுமலை புவனேஸ்வரி அம்மன் ஆலயம் )

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் விழிசிட்டி, தெல்லிப்பளையை வசிப்பிடமாகவும் இணுவில் தெற்கு, இணுவிலை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட க. சு. சண்முகநாதன் நேற்று (16.05.2021) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் தங்கம்மாவின் (இளைப்பாறிய கணித ஆசிரியை மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பளை) அன்புக் கணவரும் ஜனார்த்தனன் (சிரேஷ்ட உதவி முகாமையாளர் - பிராந்திய தொலைத்தொடர்பு அலுவலகம், யாழ்ப்பாணம்), கௌசிதகி (ஆசிரியை - மல்லாகம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பொன்மோகனச்செல்வி, ஜசீதரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - கட்டடங்கள் திணைக்களம்) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புச் சகோதரனும் கிசோரன், கிருசாணு, கச்சபி, ஜஷாகன், நயனி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (16.05.2021) ஞாயிற்றுக்கிழமை சுகாதார வழிமுறைக்கு அமைவாக இணுவில் தெற்கில் இடம்பெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் தெற்கு, இணுவில். 021 224 1515 தகவல்:- குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## கனகசபை யோகநாதன்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், சீனிவாசகம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை யோகநாதன் நேற்று (16.05.2021) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை - நாகபூசணி தம்பதியரின் அன்புப் புதல்வனும் வைத்திலிங்கம் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் கமலாதேவி, ஈஸ்வரபாதம் (சிவம்), காலஞ்சென்ற நவநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் பாலரட்ணசிங்கம் (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற நடராசர், மாணிக்கவாசகம், மகேஸ்வரி (கொழும்பு), சண்முகவடிவேல் (லண்டன்), நந்தினி (கனடா), விக்னேஸ்வரி (லண்டன்), ரெத்தினாம்பிகை ஆகியோரின் மைத்துனரும் தவக்குமார் (லண்டன்), இந்திரகுமார் (சகானா ஜூவல்லரி), யசோதா, ராஜ்குமார் ( அனர்த்த முகாமைத்துவ அபிவிருத்தி உத்தியோகத்தர் - வேலணை பிரதேச செயலகம்), றஞ்சிதா (சுவிஸ்) ஆகியோரின் தந்தையும் சதீஸ்குமார், மயூரன், பார்திகா ஆகியோரின் மாமனாரும் சகானா, ரம்மியா, சந்தோஸ், அக்ஷயன், அஜய், ஆரூஸ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.05.2021) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-2162)

சீனிவாசகம் வீதி, யாழ்ப்பாணம்.

இந்திரகுமார் (மகன்) : 077 780 2718

ராஜ்குமார் (மகன்) : 077 736 0616

தகவல்:- குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதப் பேரவலத்தின் 12 ஆவது நினைவேந்தல்

# ஒன்றுகூடுவதை தவிர்த்து நினைவேந்தலை முன்னெடுப்போம்

## தமிழ்க் கட்சிகள் பகிரங்க அழைப்பு

(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்காலில் அரங்கேறிய மனிதப்பேரவலத்தின் 12 ஆவது ஆண்டு நினைவேந்தலில் அனைவரும் பங்கேற்கும் அதேநேரம், பொது வெளியில் ஒன்றுகூடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகியன வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் மக்களிடத்தில் கோரியுள்ளது.



கொரோனா பரவல் மிகவும் மோசமாகக் காணப்படுகின்ற நிலையில் அனைவரும் தங்கியிருக்கும் இடங்களிலிருந்தே நினைவேந்தலை ஏக நேரத்தில் முன்னெடுக்குமாறும் கோரியுள்ளன.

இனப்படுகொலைக்கான நீதிக்காக போராடிக்கொண்டிருக்கும் தமிழினம் மீண்டும் கொரோனா போன்ற நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்காதிருப்பதற்காகவே இவ்விதமான தீர்மானத்தினை எடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளன.

இலங்கை அரசாங்கத்தினைப் பொறுத்தவரையில் தமிழினப் படுகொலைக்கான நீதிக் கோரிக்கை மட்டுமல்ல, நினைவேந்தலைச் செய்வதையே விரும்பவில்லை. அதனாலேயே நினைவுத்தூபியை உடைத்தழித்துள்ளது. ஆகவே, இந்த அரசாங்கம் நினைவேந்தலை முன்னெடுப்பதற்கு இடமளிக்கும் என்றும் கருதவில்லை. ஆனால், முள்ளிவாய்க்காலில் நடைபெற்றது இனப்படுகொலை தான், அங்கு மக்கள் கொத்துக்கொத்தாக படுகொலை செய்யப்பட்டார்கள் என்பதை வலியுறுத்தி நினைவேந்தல் முன்னெடுக்கப்பட வேண்டும். அதில் எவ்விதமான மாற்றுக்கருத்துக்கும் இடமில்லை.

அதேநேரம் நினைவேந்தலை முன்னெடுப்பதற்காக பொதுவெளியில் தற்போது கூடுகின்ற போது, கொரோனாவின் பெயரால் எமது மக்களை வேறுவேறு பொறிமுறைகளை வகுத்து இலங்கை அரசாங்கம் அதனை முடக்கவே முனையும். குறிப்பாக கொரோனா பாதுகாப்பு சட்டங்களைப் பயன்படுத்தி எமது மக்கள் மீது திட்டமிட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் வாய்ப்புக்கள் உள்ளன.

ஆகவே, எமது மக்கள் நினைவேந்தலை முன்னெடுப்பதற்காக, அச்சுறுத்தப்படுவதையோ, அடக்குமுறைக்கு உள்ளாவதையோ தடுப்பதாக இருந்தால் ஒன்றுகூடலைத் தவிர்க்க வேண்டியது அவசியமாகின்றது என அக் கட்சிகள் தெரிவித்தன. (நி-4)

## இஸ்ரேலிலுள்ள இலங்கையர்கள் தேவையற்ற பயணங்களை தவிர்க்கவும் இலங்கைத் தூதரகம் அறிவிப்பு

(ஜெருசலேம்)

இஸ்ரேலில் ஏற்பட்டுள்ள அவசர நிலைமையின் கீழ், அங்கு வசிக்கும் இலங்கையர்களை அவதானமாக இருக்குமாறு இஸ்ரேலின் டெல் அவிவ் நகரிலுள்ள இலங்கைத் தூதரகம் விசேட அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

குறிப்பாக இஸ்ரேலில் தோன்றியுள்ள அமைதியற்ற சூழ்நிலையில், மக்கள் அதிகமாக ஒன்றுகூடும் இடங்களுக்குச் செல்வதை தவிர்க்குமாறும் தேவையற்ற பயணங்களை மேற்கொள்ள வேண்டாமென்றும் இஸ்ரேலிலுள்ள இலங்கைத் தூதரகம் இலங்கையர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. (நி-4)

## அவசர நிலைமைகளில் அழைக்கவும்

(கரணவாய்)

கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை முக்கிய அறிவித்தல் ஒன்றை நேற்று வெளியிட்டுள்ளது.

தற்போது எமது பிரதேசத்தில் கொவிட்-19 நோயாளிகள் அறிகுறிகளுடன் சமூக மட்டத்தில் கண்டறியப்படுகிறார்கள். எனவே பொது மக்கள் நோய் அறிகுறிகள் மற்றும் நோயாளிகளின் தொடுகையாளர்கள் பற்றிய தகவல்களைப் பரிமாறுவதற்கும் அவசர நிலைமைகளில் தொடர்பு கொள்வதற்கும் பின்வரும் தொலைபேசி இலக்கங்களைப் பயன்படுத்துமாறு கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

அந்த வகையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பிரிவின் தொலைபேசி இலக்கங்கள், அல்வாய்- 077 1210664, நெல்லியடி- 077 121 0666, உடுப்பிட்டி- 077 451 1068, கரணவாய்-077 207 3303, துன்னாலை- 077 700 5746 மற்றும் மேற்பார்வைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் -077 729 7574 மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி- 076 771 3636 என்பனவாகும்.

(5-4-0[illegible])

## நடமாடும் சேவையில் பொருட்கள் விநியோகம்

(கொழும்பு)

பயணக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள காலப்பகுதியில் மக்களுக்கு தேவையான மரக்கறிகள், பழங்கள் மற்றும் அத்தியாவசிய பொருட்களை நடமாடும் சேவைகளூடாக விநியோகிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும், இதற்கு பிரதேச செயலாளரின் விசேட அனுமதிப்பத்திரம் கட்டாயமானதாகும் என பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பு ஜனாதிபதி செயலணி தெரிவித்துள்ளது.

இது குறித்து அனைத்து பிரதேச செயலாளர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்களுக்கு தேவையான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலணி [illegible] ளது. (நி-4)

## அறிகுறிகள் தென்பட்டால் தடுப்பூசி ஏற்ற வரவேண்டாம்

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுக்கான நோய் அறிகுறிகள் இருப்பவர்கள், கொரோனாத் தடுப்பூசி ஏற்றிக்கொள்ள தகுதியற்றவர்கள் என்றும், அறிகுறிகள் காணப்படுமாயின் தடுப்பூசியை ஏற்றிக் கொள்ள வர வேண்டாமென்றும் தொற்று நோய் பிரிவின் விசேட வைத்திய நிபுணர், சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

எனவே இவ்வாறு தொற்றுக்குள்ளானவர்கள் தடுப்பூசியை ஏற்றிக்கொள்வதில் எவ்வித பலனுமில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (நி-4)

## அத்தியாவசிய வழக்குகளை விசாரிக்க தீர்மானம்

(கொழும்பு)

அத்தியாவசிய வழக்குகளை மாத்திரம் திறந்த நீதிமன்றத்தில் விசாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாட்டில் நிலவும் கொரோனாத் தொற்று நிலைமையினை கருத்திற் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இரு தரப்பினரோ அல்லது அவர்கள் சார்பில் ஆஜராகும் சட்டத்தரணிகளோ நகர்த்தல் பத்திரத்தினூடாக விடயங்களை முன்வைக்கும் பட்சத்தில், அதன் அத்தியாவசியம் கருதி மாத்திரம் வழக்கு விசாரணையை முன்னெடுக்கவுள்ளதாக நீதிமன்ற சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஏனைய வழக்கு விசாரணைகளை இரு தரப்பினர்கள் மற்றும் சட்டத்தரணிகளுக்கு அழைப்பு விடுக்காமலே, பிற்போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், ஏனைய நீதிமன்றங்களின் செயற்பாடுகள் குறைந்த எண்ணிக்கையிலான ஊழியர்களுடன் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதனடிப்படையில், உயர் நீதிமன்றம் உள்ளிட்ட ஏனைய அனைத்து நீதிமன்றங்களின் நடவடிக்கைகளும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே முன்னெடுக்கப்படவுள்ளதாக நீதிமன்ற சேவை ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் தொடரும் கொரோனா வேட்டை

(டில்லி)

இந்தியாவில் நேற்று முன் தினம் மட்டும் கொரோனா வால் மொத்தம் 4 ஆயிரத்து 77 பேர் உயிரிழந்துள்ளதாக இந் திய மத்திய சுகாதார அமைச்சு நேற்றுக் காலை விடுத்துள்ள நாளாந்த நிலவர அறிக்கை யில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இவற்றுடன், இந்தியாவில் பதிவான மொத்த கொரோனா மரணாங்களின் எண்ணிக்கை 2 இலட்சத்து 70 ஆயிரத்து 284 ஆக உயர்ந்துள்ளது.

தொற்று நோயாளர் தொகை யில் கடந்த சில நாட்களாக சற்று சரிவு ஏற்பட்டு வரு கிறது. நேற்று முன்தினம் மட்டும் புதிதாக 3 இலட்சத்து 11 ஆயிர த்து 170 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

இவற்றுடன், நாட்டின் மொத்த பாதிப்பு எண்ணி க்கை 2 கோடியே 46 இலட்சத்து 84 ஆயிரத்து 77 ஆக உயர்ந் துள்ளது.

நேற்று முன்தினம் வரை 18 கோடியே 22 இலட்சத்து 20 ஆயிரத்து 164 பேருக்கு கொரோனா தடுப்பூசி போடப்பட் டுள்ளது. (நி-4-8)

**உலகளவில் கொரோனா**
**உயிரிழப்பு :-3 387 165**
**தொற்று :-163 304 590**
**(நேற்றைய நிலவரம்)**

# ஆப்கானிஸ்தான் மசூதியில் பாரிய குண்டுவெடிப்பு

## 12 பேர் பலி, 15 பேர் காயம்



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் காபூ லின் ஷகர்தரா மாவட்டத் திலுள்ள ஒரு மசூதியில் கடந்த வெள்ளிக்கிழமை சிறப்பு தொழுகை நடைபெற்றுக் கொண்டிருந்த நிலையில், மசூதிக்குள் குண்டொன்று வெடித்து சிதறியுள்ளது.

இதில் மசூதியில் பிரார்த் தனையில் ஈடுபட்டுக்கொ ண்டிருந்த 12 பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி உயிரிழந்தனர். மேலும் 15 பேர் படுகாயம் அடைந்துள்ள நிலையில் வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ள னர். தலிபான் பயங்கரவாதி கள் தாங்கள் இந்த தாக்கு தலை நடத்தவில்லை என மறுப்பு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-8)

# கொரோனாவால் தாயை வீட்டுக்குள்விட மறுத்த மகள்

(ஈரோடு)

ஈரோடு புஞ்சை புளியம் பட்டியைச் சேர்ந்த 60 வயது மூதாட்டிக்கு கடந்த வெள்ளிக் கிழமை கொரோனாத் தொற் றிருப்பது உறுதி செய்யப் பட்டது.

இதனால் மூதாட்டியின் மகள் அவரை வீட்டுக்குள் அனுமதிக்கவில்லை. என்ன செய்வது என்று தெரியாமல் வீதியில் கவலையுடன் உட்கார்ந்தார்.

பலர் கேட்டுக்கொண்ட போதும் அவரின் மகள் அவரை வீட்டுக்குள் அனும திக்கவில்லை. இரவு மட்டும் வீட்டின் முன் வாயில் பகுதி யில் தங்க அவரது மகள் அனுமதித்தாள்.

நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் அம்புலன் ஸில் மூதாட்டியை நகராட்சி நிர்வாகத்தினர் ஏற்றி வைத் தியசாலையில் சிகிச்சைக் காக அனுமதித்தனர். (நி-4-8)

# இந்தியாவுக்கு வந்தடைந்தது ஸ்புட்னிக்-வி தடுப்பூசிகள்

(டில்லி)

இந்தியாவில் கொவி ஷீல்ட், கொவக்ஸின் ஆகிய கொரோனா தடுப்பூசிகளு டன் ரஷ்யாவின் ஸ்புட்னிக்-வி தடுப்பூசியும் பயன்பாட்டி ற்கு வந்துள்ளது.

இந்தியாவின் அவசர தேவை கருதி உடனடியாக தடுப்பூசி மருந்தை வழங் குவதாக ரஷ்யா கூறியிருந் தது. அதன்படி முதற்கட்ட மாக 1.5 இலட்சம் டோஸ் ஸ்புட்னிக்-வி தடுப்பூசி மருந் துகள் கடந்த முதலாம் திகதி ஐதராபாத் வந்தது.

இந்நிலையில், இரண் டாம் தொகுப்பு ஸ்புட்னிக்-வி தடுப்பூசி நேற்று ஐதராபாத் வந்தடைந்தது.

ஸ்புட்னிக்-வி தடுப்பூசியை இந்தியாவில் தயாரிப்பதற் கும் ஐதராபாத்தைச் சேர்ந்த மருத்துவர் ரெட்டிஸ் ஆய்வ கம் ஒப்பந்தம் செய்துள்ளது. அதன்படி கடந்த வெள்ளிக் கிழமை மருந்தை விற்ப னைக்கு அறிமுகம் செய்து விலையையும் நிர்ணயித் தது.

அதே நாளில் தடுப்பூசி யின் முதல் டோஸ் செலுத் தும் பணியையும் தொடங்கி யது. ஒரு டோஸ் மட்டுமே செலுத்தக்கூடிய இந்தியா-ஸ்புட்னிக் லைட் தடுப்பூ சியை விரைவில் அறிமுகம் செய்ய திட்டமிட்டிருப்பதா கவும் ரஷ்யத் தூதர் குடா ஷேவ் கூறினார். (நி-4-8)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2313

### சரவணன்

உணரும்வரை உண்மையும் ஒரு பொய்தான்...
புரிகின்றவரை வாழ்க்கையும் ஒரு புதிர் தான்



### சொப்னா

தாய் இறக்கும் போது மொட்டை போடச் சொன்ன சமூகம் அவர் இருக்கும் போது சோறு போடக் கற்றுத்தரவில்லை




### ஸ்ரீதர்குமார்

காயங்கள் இல்லாமல் கனவுகள் காணலாம்... ஆனால் வலிகள் இல்லாமல் வாழ்க்கையை வெல்ல முடியாது...



### லோகநாதன்

கேட்பவை எல்லாம் கிடைத்துவிட்டால் வாழ்க்கையில் ரசனை இருக்காது... கிடைப்பவை எல்லாம் நிலைத்துவிட்டால் கேட்பதற்கு எதுவும் இருக்காது



### உமா

பிறருக்கு எதையும் கொடுக்கமுடியவில்லை என்றாலும் மனதார வாழ்த்துங்கள், நம்பிக்கையை ஏற்படுத்திக் கொடுங்கள், கடவுளிடம் மற்றவருக்காக பிரார்த்தனை செய்யுங்கள்



### விஜயகுமார்

தினமும் ஓய்வில்லாமல் உழைப்பதால்தான் எல்லா இடத்திலும் உயரத்தில் உள்ளது கடிகாரம்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவற்றை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பராமரிப்பின்றி காணப்படும் வீதிகள்

(கண்டாவளை)

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச சபைக்குச் சொந்தமான புத்துவெட்டுவான் மற்றும் ஐயன்கன்குளம் ஆகிய கிராமங்களில் காணப்படுகின்ற பிரதேச சபைக்குச் சொந்தமான அதிகளவான வீதிகள் உரிய பராமரிப்புக்களின்றி பற்றைக் காடுகளாக காணப்படுகின்றன.

இந்த நிலையில் காணப்படுகின்ற வீதிகளைப் பராமரிப்பதற்கோ அல்லது புனரமைக்கவோ இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

குறிப்பாக வீதி பெயர்ப்பலகைகள், பற்றைக் காடுகள் மூடிக் காணப்படுகின்றன. எனவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (8-4-315)

## பயணத்தடையிலும் மரக்கறிகளை சந்தைப்படுத்த அனுமதி

(குருமன்காடு)

வவுனியாவில் இருந்து வெளி மாகாணங்கள் மற்றும் வேறு மாவட்டங்களுக்கு மரக்கறிகளைக் கொண்டு சென்று சந்தைப்படுத்துவதற்கு அனுமதிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் நே.விஸ்ணுதாசன் தெரிவித்தார்.

விவசாய உற்பத்திகளை சந்தைப்படுத்த கொண்டு செல்லும் விவசாயிகள் தங்கள் பிரிவு கிராம உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தலுடன் மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு வருகை தந்து அனுமதியைப்பெற முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (8-4-250)

# நாட்டின் தற்போதைய பிரச்சினையை குறைப்பதற்காக பாடுபடும் இளைஞர்கள்

(வவுனியா)



நாட்டில் தீவிரமாகப் பரவிவரும் கொரோனாத் தொற்று நிலைமையின் காரணமாக மாவட்டங்கள் தோறும் தொற்றிற்கு உள்ளாகும் கொரோனாத் தொற்றாளர்களுக்கு சிகிச்சை வழங்கக் கூடியவாறான ஏற்பாடுகள் சுகாதாரப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், அதற்கு இணையாக இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷவினது ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைவாக 10 நாட்களில் 10,000 கட்டில்கள் எனும் செயற்றிட்டம் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதற்கு அமைவாக மன்னார், வவுனியா மாவட்ட இளைஞர்களால் மாவட்டங்களில் உள்ள அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் பிரதேச சம்மேளனங்கள் ஊடாக கொரோனா நோயாளர்களை பராமரிப்பதற்கான கட்டில் உருவாக்கும் பணிமிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. (8-4-299-285)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் அதிபர்
திரு.வே.புவனேந்திரராஜா
அவர்களின் பாசமிகு தாயார்

**வேலுப்பிள்ளை தங்கமலர்**

அவர்கள் கடந்த (12.05.2021) புதன்கிழமை இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பணியாளர் நலன்புரிச் சங்கம்,
யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி.
(C-2160)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் அதிபர்
திரு.வே.புவனேந்திரராஜா
அவர்களின் பாசமிகு தாயார்

**வேலுப்பிள்ளை தங்கமலர்**

அவர்கள் கடந்த (12.05.2021) புதன்கிழமை இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி.
(C-2161)

## கண்ணீர் அஞ்சலி



**சிவஸ்ரீ தியாக.சோமாஸ்கந்தராஜக் குருக்கள்**

தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் ஆலய ஆதீன கர்த்தா சிவஸ்ரீ தியாக.சோமாஸ்கந்தராஜக் குருக்கள் அவர்களின் மரணச் செய்தி அறிந்து துயர் அடைகின்றோம். அவரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா நெல்லண்டை பத்திரகாளி அம்மனின் திருவடிகளில் இளைப்பாற வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

வலம்புரி நிர்வாகம்.

## மரண அறிவித்தல்



**அமரர். அந்தோனிப்பிள்ளை மேரியோசேப்(சீசர்)**

| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 02.10.1960 | 12.05.2021 |

துன்னாலை வடக்கு மாதா கோவிலடியைப் பிறப்பிடமாகவும் பாஹ்றெமினை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அமரர். மேரியோசேப் (சீசர்) 12.05.2021 அன்று இரவு பாஹ்றெமினில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை மேரிதிரேசா தம்பதியரின் அன்பு மகனும், அமல பத்திமாவின் அன்புக் கணவரும், லியோனிசாவின் பாசமிகு தந்தையும், திருமதி மேரி அற்புதம் கணேஷமூர்த்தியின் அருமைச் சகோதரனும் ஆவார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

021 226 5901

தகவல்:
ந.கணேஷமூர்த்தி
க.மேரி அற்புதம்

(C-2158)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்றுள்ள தாய் பிரசவித்த குழந்தைகளுக்கு தொற்றில்லை

(நல்லூர்)

கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்று வந்த பெண்ணொருவர் இரட்டை குழந்தைகளைப் பிரசவித்த நிலையில் தாயும் சேய்களும் நலமாக வீடு திரும்பியுள்ளனர்.

கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த கர்ப்பிணிப் பெண் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இரட்டை குழந்தைகளை பிரசவித்தார்.

இந்நிலையில் தாய்க்கு தொடர்ந்து வைத்தியர்களின் விசேட கண்காணிப்புடன் சிகிச்சை வழங்கப்பட்டு வந்தது. பிறந்த குழந்தைகளுக்குத் தொற்று ஏற்பட்டு இருக்கவில்லை. இந்நிலையில் தாய் தொற்றில் இருந்து பூரண சுகம் பெற்ற நிலையில் நேற்று முன்தினம் தனது இரட்டை குழந்தைகளுடன் வீடு திரும்பினார். (5-4-33)

# பொதுமக்களின் ஒத்துழைப்புடன் சட்டவிரோத செயல்களை கட்டுப்படுத்தலாம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பரவலாக இடம்பெற்று வருகின்ற போதைப்பொருள் கடத்தல் மற்றும் களவு உள்ளிட்ட சட்டவிரோதச் செயற்பாடுகளை முற்றாகக் கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் சு.நிதிகேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி நகரசபையில் சாவகச்சேரி பொலிஸாரின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இக் கோரிக்கையை விடுத்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் சாவகச்சேரி பொலிஸ் நிலையம் மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் ஆகியன இருந்தும் சில சட்டவிரோதச் செயற்பாடுகளை முழுமையாக கட்டுப்படுத்த முடியாதுள்ளது.

குறிப்பாக சாவகச்சேரி பொதுச்சந்தை வளாகம், நகரசபையின் பழைய கொல்களம் ஆகிய பகுதிகளில் தொடர்ச்சியாக போதைப்பொருள் விற்பனை இடம்பெற்று வருகிறது.

சாவகச்சேரி நகர் பகுதியில் இடம்பெறுகின்ற இவ்வாறான சட்டவிரோதச் செயற்பாடுகளை முழுமையாகக் கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

பொதுமக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் பொலிஸாருக்கு பக்கபலமாக இருக்கும் பட்சத்தில் இவ்வாறான சட்டவிரோதச் செயற்பாடுகளை அடியோடு நிறுத்த முடியும் என சாவகச்சேரி பொலிஸார் பதிலளித்தனர்.(5-4-33)

# குப்பிழானில் திருட்டு பொலிஸில் முறைப்பாடு

(குப்பிழான்)

குப்பிழான் பகுதியில் கடந்த திங்கட்கிழமை திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

குப்பிழான் தெற்குப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை வீட்டிலுள்ளவர்கள் வெளியில் சென்ற வேளை நண்பகல் 12 மணியளவில் வீட்டின் ஓடு மற்றும் சீற்றை உடைத்து வீட்டிற்கு உள்ளே இறங்கிய திருடர்கள் 50 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் 5000 ரூபாய் பெறுமதியான பொருட்களைத் திருடிக் கொண்டு சென்றிருந்தனர்.

இத்திருட்டுச் சம்பவம் தொடர்பில்சுன்னாகம்பொலிஸ் நிலையத்தில் வீட்டு உரிமையாளரினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.(5-4-18)

## 23 ஆவது நினைவு தினம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் முதற் பெண் முதல்வர் திருமதி.சறோஜினி யோகேஸ்வரனின் 23 ஆவது நினைவு தினம் இன்றாகும். (5-4)



சைவ மகா சபையினால் கோப்பாய் கொரோனா சிகிச்சை மையத்திலுள்ள சிறுவர்களுக்கும் வட்டுக்கோட்டை கொரோனா பராமரிப்பு நிலையத்திலுள்ள சிறுவர்களுக்கும் ஒரு தொகுதி பால்மா, பிஸ்கெட், நூடில்ஸ் போன்ற உலர் உணவுகள் கடந்த வாரம் வழங்கப்பட்டன. (படம்:-சிவசாந்தன்)




நெடுந்தீவு ஊரும் உறவும் அமைப்பின் நிர்வாகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்தவங்கிப் பிரிவின் அனுசரணையில் இரத்ததான முகாம் கடந்த வியாழக்கிழமை நெடுந்தீவு பிரதேச வைத்தியசாலையில் இடம்பெற்றது. மேற்படி முகாமில் 31 பேர் சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாகக் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கினர். (படம்:-ரவிசாந்)

# பயணத்தடையிலும் கோயில், வீடுகளில் திருட்டு

(நல்லூர்)

நாடளாவிய ரீதியில் பயணத் தடை அமுலில் இருந்த வேளையில் ஐந்து வீடுகள் மற்றும் கோவில் ஒன்றில் திருட்டு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. யாழ்ப்பாணம் நாவற்குழி பகுதிகளிடையே குறித்த திருட்டு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

நாவற்குழி 5 வீட்டுத்திட்ட பகுதியில் உள்ள 5 வீடுகளுக்குள் அடுத்தடுத்து புகுந்த திருடர்கள், ஒரு வீட்டில் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் பணமும் மற்றொரு வீட்டில் 40 இற்கும் மேற்பட்ட வளர்ப்பு புறாக்கள், மற்றைய வீட்டில் 16 வளர்ப்பு கோழிகள், மற்றைய வீட்டில் 6 வளர்ப்பு கோழிகள், ஐந்தாவது வீட்டில் 5 வளர்ப்பு முயல்கள் என்பனவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

இதேவேளை, நாவற்குழி சித்திர வேலாயுதர் ஆலயத்தினுள் ஓடு பிரித்து நுழைந்த திருடர்கள், ஆலயத்தினுள் இருந்த சுமார் 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பொருட்களை களவாடிச் சென்றுள்ளனர்.

குறித்த சம்பவங்கள் தொடர்பில், வீடுகளின் உரிமையாளர்களும் ஆலய நிர்வாகத்தினரும் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.(5-4-30-33)

# போதைப் பாவனை கட்டுப்படுத்தலில் அதிகாரிகள் அசமந்தப் போக்கு

## பொதுமக்கள் சுட்டிக்காட்டு

(கண்டாவளை)

கிளிநொச்சி வட்டக்கச்சி பகுதியில் போதைப்பொருள் பாவனையால் உயிரிழப்புக்களும் குடும்ப வன்முறைகளும் அதிகரித்து வருகின்றது.

இதனை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரியும் கவனயீர்ப்புப் போராட்டங்களை நடத்தியும் உரிய அதிகாரிகளுக்கு மகஜர்களை வழங்கியும் இதுவரை எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என பிரதேச பொது அமைப்புக்களும் பொதுமக்களும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கிளிநொச்சி வட்டக்கச்சி பிரதேசத்தில் கசிப்பு மற்றும் கஞ்சா போன்ற போதைப் பொருட்களின் பாவனை காரணமாக பல்வேறுபட்ட கலாசார சீரழிவுகளும் குடும்ப வன்முறைகளும் இடம்பெறும் அதேவேளை கொலை, கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்று வருகிறது.

கடந்த மார்ச் மாதம் 17 ஆம் திகதி பிரதேச பொது அமைப்புக்கள், பிரதேச பொது மக்கள் இணைந்து கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்ததுடன் 12 இற்கும் மேற்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் மகஜர்களை வழங்கியிருந்தனர்.

ஆனால் இதுவரை எந்த வித நடவடிக்கைகளும் இன்றி போதைப் பொருட்களின் பாவனை மற்றும் கசிப்பு உற்பத்தி விற்பனை அதிகரித்து வருவதாக பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (8-4-315)

# வவுனியா நகரில் தொற்று நீக்கம்



(நெளுக்குளம்)

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக நாடளாவிய ரீதியில் பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன் அடிப்படையில் வவுனியா நகரில் தொற்று நீக்கும் செயற்பாடுகள் நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சுகாதார பிரிவினர், இராணுவம், பொலிஸாரின் ஏற்பாட்டில் வவுனியா பேருந்து நிலையம் மற்றும் வங்கிகளின் தன்னியக்க இயந்திரங்கள், வியாபார நிலையங்கள் மற்றும் நகரின் முக்கிய பகுதிகளில் தொற்றுநீக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இவ்வாறு புதுக்குடியிருப்பு பிரதேசத்திலும் தொற்று நீக்கல் செயற்பாடு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.(8-4-250-281-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணத்தடையை மீறியவர்கள்மீது பொலிஸாரின் அதிரடி நடவடிக்கை



(குருமன்காடு)

வவுனியா பொலிஸாருடன் இணைந்து பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மோட்டார் சைக்கிள்களில் வவுனியா நகரில் திடீர் சோதனை நடவடிக்கை ஒன்றினை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது அனுமதியின்றி வர்த்தக நிலையத்தினை திறந்திருந்தவர்கள், அனுமதிப்பத்திரமின்றி பொருட்களை ஏற்றிச் சென்ற வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் நடமாடியவர்கள், ஆடைத்தொழிற்சாலை அனுமதிப்பத்திரத்துடன் வேறு நபர்களை ஏற்றிச் சென்ற வாகனங்கள் என்பன பொலிஸார் மற்றும் சுகாதார பிரிவினரினால் மடக்கிப்பிடிக்கப்பட்டு எச்சரிக்கை விடுக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டன.

மேலும், அனுமதிப்பத்திரமின்றி தென்பகுதி மற்றும் யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவிற்கு வருகை தந்துள்ளமையும் இதன்போது கண்டறியப்பட்டு அவர்களுக்கு எதிராக முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டன. (4-8-250)

# யானைகள் அட்டகாசம்; பயிர்கள் நாசம்



(தருமபுரம்)

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட முழங்காவில் பகுதியில் நேற்று முன்தினம் இரவு தோட்டத்திற்குள் யானைகள் புகுந்து நூற்றுக்கணக்கான பப்பாசி மற்றும் வாழை மரங்களை சேதப்படுத்தி அழித்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். யானைகளால் ஏற்படும் சேதம் தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு அறிவித்தும் பயன் எதுவும் கிடைக்க வில்லை எனவும் குற்றம் சாட்டுகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உயிர்ச்சேதங்கள் ஏற்படும் முன் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென தெரிவிக்கின்றனர். (4-8-316)

## வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் (VOGT)
### பயிலுநர் ஆட்சேர்ப்பு

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம், இலங்கை சோசலிசக் குடியரசின் 1980 ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புக்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதாகும்.

இந்நிறுவனத்திற்கு பின்வரும் தகைமையுடைய வடமராட்சியில் நிரந்தரமாக வசிக்கும் 18-35 வயதிற்குட்பட்ட ஆண்/ பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி நிலை:-** கணக்கு லிகிதர் (பயிலுநர்)

**தகைமைகள்:-**

01. க.பொ.த. (உயர்தரம்- வர்த்தகப்பிரிவு) சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட
02. ஆங்கில அறிவு, கணனி அறிவு
03. மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம்
04. ஏனைய தகைமைகள்

**சேவையின் தன்மை:-** கிராம அமைப்புக்களுடனும் மக்களுடனும் சமூக அணிதிரட்டும் ஆற்றலை மேம்படுத்தும் திறன், பேச்சாற்றல், தொடர்பாடல், ஆவணப்படுத்தல், அறிக்கை சமர்ப்பித்தல் எனும் திறனைக் கொண்டிருத்தல்.

விண்ணப்பதாரி தமது சுயவிபரக்கோவையுடன் விண்ணப்பங்களை **தலைவர், வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் (VOGT), அல்வாய் கிழக்கு, அல்வாய்** என்ற முகவரிக்கு **30.05.2021** இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும். (C-2155)

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் (VOGT), அல்வாய் கிழக்கு, அல்வாய்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




## செல்வி. கவினா கனகேஸ்வரன்

(3A- மாவட்ட நிலை-01)

எமது பாடசாலை மாணவி கனகேஸ்வரன் கவினா வெளியாகிய 2020 உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் 3A பெற்று யாழ். மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.தேசிய மட்டத்தில் பதினேழாவது இடத்தைப் பெற்று யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரிக்கும் கற்பித்த ஆசிரியர்களுக்கும் பெருமை சேர்த்துள்ளார். இதனைக் கல்லூரிச் சமூகம் பாராட்டி கௌரவிப்பதில் பெருமிதமடைகின்றது.

(6881)

வாழ்த்துவோர்: ஆசிரியர் கழகம்,
யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.

## அறிவித்தல்
## பூநகரி பிரதேச சபை

வலம்புரி பத்திரிகையில் **28.04.2021** ஆம் திகதி 7ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட குறித்த விளம்பரத்தில் 03 வேலைகளின் கேள்வி திறத்தல் **14.05.2021** ஆம் திகதி பிற்பகல் 02.30 மணிக்கு என பிரசுரிக்கப்பட்டது. எனினும் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கோவிட்19 நோய் தொற்று தாக்கத்தினால் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலைமையினால் குறித்த வேலைகளுக்கான கேள்வி திறத்தல் நிகழ்வு இன்று **17.05.2021** ஆம் திகதி பிற்பகல் 02.30 மணிக்கு பிற்போடப்பட்டுள்ளது, என்பதுடன் இன்றைய தினம் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வி ஆவணங்களை பெற்று பூரணப்படுத்திய ஆவணங்களை பிற்பகல் 02.30 மணிக்கு முன் சமர்ப்பிக்க முடியும்.

அருணாசலம் ஐயம்பிள்ளை
தலைவர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,
பூநகரி பிரதேச சபை.

(C-2157)

## மணிவிழா வாழ்த்துக்கள்




### திருமதி. வசந்தலாமலர் கணேசலிங்கம்

(SLPS-1)

கல்விப் புலத்தில் ஆசிரியர் பணி
06.08.1988-19.12.2001
அதிபர் பணி
20.12.2001-13.05.2021

யா/ மீசாலை கமலாம்பிகை வித்தியாலயத்தில் அதிபராகப் பணிபுரிந்து 14.05.2021 அன்று மணிவிழாக் கண்ட அதிபருக்கு எமது வாழ்த்துக்கள்.

(C-2159)

மராட்சி அதிபர் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசி மாத இராசி பலன்கள்

## 15.05.2021-14.06.2021

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## பொருளாதார நிலை உயரும்



மேட இராசி வாசகர்களே!

பிலவ வருடம் வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் சகாய ஸ்தானத்தில் சஞ்சரித்து குருவால் பார்க்கப்படுகின்றார். மாதத் தொடக்கத்தில் குருமங்கள யோகம், புத சுக்கிர யோகம் போன்ற யோகங்களும் ஏற்படுவதால் பொருளாதார நிலை உயரும். தொழில் வளர்ச்சி மேலோங்கும்.

### சனியின் வக்கிர இயக்கம்

உங்கள் இராசிக்கு தொழில் மற்றும் லாப ஸ்தானத்திற்கு அதிபதியானவர் சனி பகவான். அவர் மாதத் தொடக்கத்திலேயே வக்கிர இயக்கத்தில் இருக்கின்றார். எனவே நடைபெறும் தொழிலில் சிறுசிறு மாற்றங்களைச் செய்ய நேரிடலாம். பங்குதாரர்களால் பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணிபுரியும் இடத்தில் சகப் பணியாளர்களால் தொல்லை உண்டு. மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது.

### செவ்வாய்-சனி பார்வைக் காலம்

உங்கள் இராசிநாதன் மற்றும் 8 ஆம் இடத்திற்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் மாதத் தொடக்கத்திலேயே சகாய ஸ்தானத்தில் சஞ்சரித்து, தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனியைப் பார்க்கின்றார். பொதுவாக சனி, செவ்வாயின் பார்வை அவ்வளவு நல்லதல்ல என்பார்கள். ஆனால் இப்பொழுது அதிசார கதியில் கும்பத்தில் குரு வீற்றிருந்து செவ்வாயைப் பார்க்கின்றார். எனவே செவ்வாயின் கடுமை குறையும். அவரது பார்வை புனிதமடைந்து சனியின் மீது பதிவதால், மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகும். செவ்வாய் தைரியகாரகன் என்பதால் துணிந்து சில முடிவுகளை எடுப்பீர்கள். உடன் பிறப்புகளின் திருமணம் கைகூடும்.

### புத-சுக்கிர யோகம்

உங்கள் இராசிக்கு 2, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். இந்த இரண்டு கிரகங்களும் மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 2 ஆம் இடமான தன ஸ்தானத்தில் ஒன்றுகூடிச் சஞ்சரிக்கின்றன.

அதுமட்டுமல்லாமல் பூர்வபுண்ணிய ஸ்தானத்திற்கு அதிபதியான சூரியனும், அவர்களோடு இணைந்து சஞ்சரிப்பது மிகமிகச் சிறப்பாகும். எனவே ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. இல்லத்தில் சுபகாரிய நிகழ்வுகள் நடைபெறலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு வரவேண்டிய சம்பளப் பாக்கிகள் வந்து சேரும். அரசுப் பணியில் சேர முயற்சித்தவர்களுக்கு அது கைகூடும்.




### மிதுன-சுக்கிரன் சஞ்சாரம்

மே 29 ஆம் திகதி மிதுன இராசிக்கு சுக்கிரன் செல்கின்றார். அங்குள்ள செவ்வாயோடு இணைந்து சுக்கிர மங்கள யோகத்தை உருவாக்குகின்றார். எனவே பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். இல்லம் கட்டிக் குடியேற வேண்டுமென்ற ஆசை நிறைவேறும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு வெளிநாட்டிலிருந்தும் அழைப்புகள் வரலாம்.

### கடக-செவ்வாய் சஞ்சாரம்

ஜூன் 3 ஆம் திகதி கடக இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். அங்கு அவர் நீசம் பெறுவதால் ஆரோக்கியத்தில் கொஞ்சம் கவனம் தேவை. வாகன மாற்றங்கள், இடமாற்றங்கள் ஒரு சிலருக்கு வரலாம். உடன்பிறப்புகளின் நலன் கருதி ஒரு தொகையைச் செலவிடுவீர்கள். வீண் விரயம் உண்டு. இம்மாதம் செவ்வாய்தோறும் முருகப் பெருமானை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கணவன்-மனைவிக்குள் கனிவும், பாசமும் கூடும். படித்து முடித்த பிள்ளைகளுக்கு வேலை கிடைத்து அதன் மூலம் வருமானமும் வரும். தாய் மற்றும் உடன் பிறப்புகள் தகுந்த நேரத்தில் உதவி செய்வர்.

செவ்வாய், சனியைப் பார்ப்பதால் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

## பல நல்ல வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரப்போகிறது



ரிஷப இராசி வாசகர்களே!

பிலவ வருடம் வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கின்றார். அவரோடு தன பஞ்சமாதிபதியான புதனும், சுக ஸ்தானாதிபதியான சூரியனும் இணைந்திருக்கிறார்கள். மேலும் ஜென்மத்தில் ராகுவும் இருக்கின்றது. ராகுவோடு யோகம் தரும் கிரகங்கள் இணைந்திருப்பதால் பல நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரப்போகின்றது.

### சனியின் வக்கிர இயக்கம்

உங்கள் இராசிக்கு 9, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி. அவர் மாதத் தொடக்கத்திலேயே வக்கிர நிலையில் சஞ்சரிக்கின்றார். அதேநேரத்தில் அதிசார கதியில் இயங்கும் குருவின் பார்வை, உங்கள் இராசிக்கு 2 ஆம் இடமான தன ஸ்தானத்தில் பதிகின்றது. எனவே வக்கிர சனியாக இருந்தாலும் கூட வளர்ச்சியில் பெரியளவில் பாதிப்புகள் ஏற்படாது. இருப்பினும் தொழிலில் சில நல்ல வாய்ப்புகள் வந்து கைநழுவிச் செல்லலாம். உத்தியோகத்தில் உங்களுக்கு கிடைக்க வேண்டிய பதவி உயர்வு, உங்களோடு பணிபுரிபவர்களுக்கு கிடைக்கலாம்.

### செவ்வாய்-சனி பார்வைக் காலம்

உங்கள் இராசிக்கு 7, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். சனி பகவான் 9, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர். இந்த இரண்டு கிரகங்களும் ஒன்றையொன்று பார்த்துக் கொள்வது அவ்வளவு நல்லதல்ல. விரயாதிபதியும் 9 ஆம் இடத்திற்கு அதிபதியும் ஒன்றையொன்று பார்த்துக் கொள்வதால் பூர்வீகச் சொத்துக்களை விற்பனை செய்யக் கூடிய சூழ்நிலை ஒரு சிலருக்கு உருவாகும். உடன்பிறப்புகள் உங்களுடைய கருத்துக்களை ஆதரிக்க மறுப்பர்.

### புத-சுக்கிர யோகம்

உங்கள் இராசிநாதனாகவும் 6 இற்கு அதிபதியாகவும் விளங்குபவர் சுக்கிரன். உங்கள் இராசிக்கு 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவை இரண்டும் உங்கள் இராசியிலேயே ஒன்று கூடுவது யோகம் தான். புத சுக்கிர யோகம் இருப்பதால் பொருளாதாரத்தில் திடீர் தனலாபம் வந்து சேரும். 'தங்கம், வெள்ளி போன்றவற்றில் முதலீடு




செய்யலாமா?' என்ற சிந்தனை மேலோங்கும். சூரியனும் இணைந்திருப்பதால் பொதுவாழ்வில் பொறுப்புகள் கிடைக்கும். உயர்ந்த அந்தஸ்து உள்ளவர்களின் பழக்கத்தால் ஒருசில நல்ல வாய்ப்புகளை வரவழைத்துக் கொள்வீர்கள். பெண்வழிப் பிரச்சினைகள் அகலும்.

### மிதுன-சுக்கிரன் சஞ்சாரம்

மே 29 ஆம் திகதி மிதுன இராசிக்கு சுக்கிரன் செல்கின்றார். உங்கள் இராசிநாதன் தன ஸ்தானத்திற்குச் செல்லும் இந்த நேரம் ஒரு பொன்னான நேரமாகும். தொழில் சூடு பிடிக்கும். உத்தியோகத்தில் உயர் பதவிகள் கிடைப்பதற்கான அறிகுறிகள் தோன்றும். அது மட்டுமல்லாமல் சம்பள உயர்வு வந்து சேரும்.

### கடக-செவ்வாய் சஞ்சாரம்

ஜூன் 3 ஆம் திகதி கடக இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். அங்கு அவர் நீசம் பெறுவதால் விரயங்கள் குறையும். அதேநேரம் சப்தமாதிபதியாகவும் செவ்வாய் இருப்பதால், குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் வரலாம். விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. இக்காலத்தில் செவ்வாய், சனியை சப்தம பார்வையாகப் பார்ப்பதால் மனக்குழப்பங்கள் அதிகரிக்கும்.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். வளர்ச்சி கூடும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளால் பெருமை சேரும். அவர்களுக்குரிய வேலைவாய்ப்புகள், கல்யாண காரியங்கள் போன்றவை நடைபெறுவதில் இருந்த தாமதங்கள் அகலும். தாய் மற்றும் உடன்பிறப்புகள் கேட்ட உதவிகளைச் செய்ய முன் வருவர். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பணிபுரியும் பெண்களுக்கு சலுகைகளும் சம்பள உயர்வும் கிடைக்கும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

17.05.2021
வைகாசி 03, திங்கட்கிழமை
பஞ்சமி முற்பகல் 8.28 மணிவரை
புனர்பூசம் முற்பகல் 10.25 மணிவரை
சுபநேரம் 11.53 - 1.23 மணிவரை
இராகுகாலம் 7.23 - 8.53 மணிவரை
சந்திராஷ்டமம்:- மூலம், பூராடம்
சஷ்டி விரதம். வளவன்

**மேஷம்:** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**ரிஷபம்:** நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், கௌரவம் அந்தஸ்து உயரும், செய்தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**மிதுனம்:** நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக்கொள்வீர்கள், வழிபாடு காரிய வெற்றி தரும், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், வாக்கு மேன்மையுண்டு.

**கடகம்:** எப்படி நடக்கலாம் என நினைத்த காரியமொன்று நல்லவிதமாக அமையலாம், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், பயணத்தால் பலனுண்டு.

**சிம்மம்:** தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், கொள்கைப் பிடிப்பைக் கொஞ்சம் தளர்த்தும் நிலை ஏற்படலாம்.

**கன்னி:** செல்வ நிலை உயரும் நாள், உறவினர்களின் சந்திப்பால் குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள்.

**துலாம்:** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு:** குடும்பப் பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள்.

**மகரம்:** நினைத்த காரியத்தை நிறைவேற்றும் வாய்ப்புண்டு, விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**கும்பம்:** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், கௌரவமான நாள்.

**மீனம்:** தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான அறிகுறியுண்டு, பிறருக்கு உதவ முற்படுவீர்கள்.

மிக நல்லதே நடக்கும் என நம்புவோம்.

# மூன்று நாடுகளின் பனிப்போருக்குள் சிக்கியுள்ள இலங்கை-முஜிபுர்

(கொழும்பு)

அமெரிக்கா, இந்தியா மற்றும் சீனா ஆகிய பலவந்த நாடுகளின் பனிப்போருக்கு இலங்கை இரையாகியுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.



தற்போதைய நிலவரம் தொடர்பில் செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது பேசிய அவர்,

முழு நாடும் கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்டு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள இந்த சந்தர்ப்பத்தில் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வினை வழங்குவதை விட சீனாவை மகிழ்ச்சிப்படுத்துவதே அரசாங்கத்தின் தேவையாகவுள்ளது.

அடுத்த மாதம் சீன வெளிவிவகார அமைச்சர் நாட்டுக்கு விஜயம் செய்வதற்கு முன்னர் கொழும்புத் துறைமுக நகரச் சட்ட மூலத்தை நிறைவேற்றி அவரை மகிழ்ச்சிப்படுத்த வேண்டும் என்பதில் அரசாங்கம் முழு கவனத்தையும் செலுத்தியுள்ளது.

19, 20 ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தில் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்ட மூலம் மீதான விவாதம் இடம்பெற்று 20 ஆம் திகதி வாக்கெடுப்பும் இடம்பெறவுள்ளது.

நாட்டில் தற்போது காணப்படுகின்ற கொவிட் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் இந்தச் சட்ட மூலத்தை நிறைவேற்றிக் கொள்வதில் அரசாங்கம் ஏன் இவ்வளவு ஆர்வம் காண்பிக்கிறது?

அமெரிக்கா மற்றும் இந்தியாவுக்கு எதிராக சீனா இலங்கையில் அதன் ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காகவே கடனுதவிகளை வழங்கிக் கொண்டிருக்கிறது. அதற்கு ஈடாக சீனாவை மகிழ்ச்சிப்படுத்துவதற்காக துறைமுக நகரத்தை தாரைவார்ப்பதற்கு அரசாங்கம் முயற்சித்துக் கொண்டிருக்கிறது என முஜிபுர் தெரிவித்தார். (நி-4)

# இனி வீட்டுக்கு உள்ளேயும் முகக்கவசம் அணிய வேண்டும்

(கொழும்பு)

மக்களின் பொறுப்பற்ற நடத்தை காரணமாகவே கொவிட் தொற்று பரவியதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கீர்த்தி லால் துடுவகே தெரிவித்துள்ளார்.

அரசு மற்றும் சுகாதாரப் பிரிவினர் நூற்றுக்கு 90 வீதமான நடவடிக்கைகளைச் சரியாக முன்னெடுத்திருந்ததாகவும் குறிப்பிட்டார்.

தற்போதைய நிலையில் வேலைக்குச் செல்லும் அனைவரும் வீட்டிற்கு உள்ளேயும் முகக்கவசம் அணிய வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் இடம்பெற்ற தடுப்பூசி வழங்கும் நிகழ்வை அடுத்து மக்களுடன் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (நி-4)

# முழுமையடையாத சி.ஐ.டி.விசாரணை அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக முழுமையடையாத சி.ஐ.டி.விசாரணை குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர கேட்டுக்கொண்டுள்ளார்.

விசாரணை முழுமையடையவில்லை என சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா நேற்று முன்தினம் 130 பக்கங்கள் கொண்ட கடிதம் ஒன்றினை பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பியிருந்தார்.

அதில் 42 சந்தேக நபர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்தவும் மேலும் 5 சந்தேக நபர்கள் மீது விசாரணை நிறைவடையவில்லை என்றும் சட்டமா அதிபர் சுட்டிக் காட்டியிருந்தார்.

இந்நிலையில் இந்த விவகாரம் தொடர்பாக சி.ஐ.டி.அறிக்கை சமர்ப்பிக்க அழைப்பு விடுத்துள்ளதாக அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.



இந்த தாமதம் காரணமாகவே உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடத்தையைக் குற்றவாளிகள் மற்றும் சூத்திரதாரிகளுக்கு எதிராக குற்றச்சாட்டை முன்வைக்க முடியாது போனதாக சட்டமா அதிபர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# அஹ்னாஃப் ஜஸீமை விடுவிக்குமாறு இலங்கைக்கு வலியுறுத்து

(கொழும்பு)

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ள அஹ்னாஃப் ஜஸீமை உடனடியாக விடுவிக்குமறு பல மனித உரிமை அமைப்புகள் இலங்கை அரசாங்கத்துக்கு கூட்டாக அழைப்பு விடுத்துள்ளன.

சர்வதேச மன்னிப்பு சபையும் - மனித உரிமைகள் கண்காணிப்பகம் உள்ளிட்ட 13 மனித உரிமை அமைப்புகள் நேற்று கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் அஹ்னாஃப் ஜஸீம் இன் கைது குறித்து கவலை வெளியிட்டுள்ளதுடன், ஆழ்ந்த குறைபாடுள்ள பயங்கரவாத தடை சட்டத்தை உடனடியாக இரத்து செய்ய வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளன.

26 வயதான அஹ்னாஃப் ஜஸீம் கவிஞர் மற்றும் ஆசிரியர் ஆவார், அவர் இலங்கையின் கடுமையான பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் 2020 மே 16 அன்று கைது செய்யப்பட்டார். அவர் தமிழில் எழுதிய ஒரு கவிதை புத்தகத்தில் "தீவிரவாதம்" குறித்த சிந்தனைகளும் கருத்துகளும் பொதிந்திருந்ததாகவும் அந்த நூலானது புத்தளத்தில் உள்ள ஒரு பாடசாலையில் இளைஞர்கள் மத்தியில் அவை பரப்பப்பட்டதாகவும் குற்றம்சாட்டப்பட்ட நிலையில் கைதானமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## பிரிவு

டம்டம் டப்பர டம்!
டம் டம் டப்பர டம்!

“எவன் ஒருவன் பாதி வெயிலும், பாதி நிழலுமாக அரண்மனைக்கு வந்து சக்கரவர்த்தி அவர்களைச் சந்திக்கிறானோ அவனுக்கு கஜானாவிலிருந்து நூறு தங்கக்காசு பரிசாக அளிக்கப்படும்.

டப்பரடப்பரடம்டம்!
டப்பர டப்பர டம்டம்!

தண்டோரா அறிவிப்பைக் கேட்ட அனைவரும் தங்கக் காசுகளுக்கு ஆசைப்பட்டனர். ஆனால், அப்படி ஒருவராலும் பாதி நிழலும் பாதி வெயிலுமாக அரண்மனைக்குப் போக முடியும்? ஒருத்தருக்கும் இந்தப் புதிர் விளங்கவில்லை.

ஒருத்தன், குடுகுடுப்பைக்காரன் சொன்னதைக் கேட்டு, உடலில் ஒரு பாதி வெள்ளை பெயின்ட்டும் மீதிப் பாதி கறுப்புப் பெயின்ட்டும் பூசிக் கொண்டு அக்பரிடம் போய் பரிசு கேட்டான்.

அக்பர் சக்கரவர்த்தி வயிறு குலுங்கச் சிரித்து விட்டு, அந்த சாயங்களின் விலையை அவனுக்குக் கொடுத்து விரட்டிவிடச் சொன்னார்.

இன்னொருவன் எரியும் தீப்பந்தத்தை இடுப்புக்கு மேல்நோக்கிப் பிடித்துக் கொண்டான். இந்த கீழ்ப்புறம் கறுப்பாக இருந்தது. அவன் அக்பரிடம் வந்து சன்மானம் கேட்டான்.

“நான்எதிர்பார்ப்பது நிஜ வெயில் நிஜ நிழல்” என்று கூறி அக்பர் அவனுக்குக் கொஞ்சம் பணம் கொடுத்து அனுப்பி விட்டார்.



இம்மாதிரியான கோமாளித்தனமான முயற்சிகள் பற்றிய செய்தி ஊரெங்கும் பரவியது. இது பீர்பாலையும்வந்தடைந்தது.

அவர் அக்பர் போட்ட புதிர் பற்றித் தீவிரமாகச் சிந்தித்தார். அவருக்கு ஒரு யோசனை தோன்றியது.

பீர்பால் ஒரு தச்சரை அழைத்தார். “நீ மரப் பலகையால் மூடிய கட்டில் ஒன்று தயார் செய். அதிக எடைகூடாது. கட்டிலை உயரத் தூக்கு கீழிலிருந்து நடுப்பகுதியில் உன் தலையால் அதைத் தாங்கு.

உச்சி வேளைக்கு சற்று முன்போ, பின்போ வெயில் பளீரென்று சாய்வாக அடிக்கும் நேரத்தில் கட்டிலுடன் அரண்மனைக்குச் செல். (தொடரும்)

# மகாபாரதம்


திருதராட்டினனை நோக்கி துரியோதனனுக்கு அறிவுரை கூறி அவன் அழிவைத் தடுக்குமாறு கேட்டுக் கொண்டார்.

ஆனால் திருதராட்டிரன் தன் இயலாமையைக் கூறினான். பின் கண்ணன் துரியோதனனைப் பார்த்து பேச ஆரம்பித்தார்.

“உனது தந்தையும் மற்றும் அனைத்து சான்றோரும் நீ பாண்டவர்களுடன் சேருவதையே விரும்புகின்றனர்.

அதைக் கேளாத நீ பெரும் துன்பமடைவாய். பீமனையும், அருச்சுனனையும் வென்றாலே உனக்கு உண்மையான வெற்றி கிட்டும்.

ஆனால் அவர்களை வெல்ல உன் பக்கம்




யாரும் இல்லை. குலத்தை அழித்த பழி உனக்கு வேண்டாம். பாண்டவர்களுக்கு பாதி நாட்டைக் கொடுத்து [illegible] அவர்களுடன் [illegible]ந்து வாழ்வாயாக” என்றார்.

துரியோதனன்பழைய [illegible] யான ஊசி முனைஅளவு நிலம் கூட தரமுடியாது என்பதில் உறுதியாய் இருந்தான்.”

விதுரர், பீஷ்மர், துரோணர் ஆகியோர் எனக்கே அறிவுரை கூறுகின்றனரே நான் பாண்டவருக்கு அப்படி என்ன தீது செய்தேன்?” என்றான்.

“துரியோதனா நீ செய்த தீமை ஒன்றா இரண்டா. அவர்களை வற்புறுத்தி சூதாட வைத்தாய்.

அவையில் திரௌபதியின் ஆடையை களைய முற்பட்டாய். வாரணாவதத்தில் தாயுடன் சேர்த்து அவர்களை எரிக்க முயன்றாய்.

பீமனைக் கட்டிப் போட்டதும், விஷம் கொடுத்ததும் ஆகிய கொடுமைகள் செய்தாய். இப்படி பாவங்களையே செய்த நீ என்ன தீது செய்தேன் என்கிறாய்.

நல்லவன் போல நடிக்கிறாய். சான்றோர் உரையையும் நீ மதிக்கவில்லை. சமாதானத்தை விரும்பாத நீ போர்க்களத்தில் அழிவது உறுதி” என்றார் மாதவன். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே 18 தமிழினத்தின் இருண்ட நாள்

## நாளை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாள்


ஒரு குளத்தில் உள்ள மீன்களைப் பிடிப்பதற்காக அந்த குளத்தையே இல்லாது அழித்தொழித்ததற்கு ஒப்பான ஒரு செயலே முள்ளிவாய்க் காலில் நடந்தேறியது.

2009- மே. 18 தமிழினத்தின் இருண்ட நாள். தமிழினம் கொத்துக் கொத்தாய் மடிந்த நாள்.

நீரின்றி, உணவின்றி, மருத்துவம் ஏதுமின்றி, உடுக்க உடுபுடைவை இன்றி, இருக்க வீடின்றி உயிரைப்பாதுகாக்க பாதுகாப்பு வலயத்துக்குள் ஓடிச் சென்றதும், அதே பாதுகாப்பு வலயமே தமிழினத்தின் மயானமானதும் வார்த்தைகளாலோ எழுத்துக்களாலோ வர்ணிக்க முடியாதவை.

தன் தாய் இறந்தது தெரியாது தாயின் முலையில் பால் குடித்த குழந்தையை எங்கும் கண்டீரோ? எம் ஈழத்தில் அது நடந்தேறியது.

இறந்த தன் தந்தைக்கு இறுதி



அஞ்சலி செலுத்த அவகாசம் இல்லாது உடலைகடற்கரையில் விட்டு வந்த கொடுமை கேட்டீரோ?

எம் ஈழத்தில் அது நிகழ்ந்தது.

பசிக்கமுத பிள்ளைகளுக்கு உணவு தேட பதுங்கு குழியை விட்டு வெளியே வந்த தாய் செல்லடிபட்டு சிதைந்து போன கொடுந்துயர் கேட்டிருக்கிறீரோ?

ஈழத்தில் எம் கண் முன்னே அது நடந்தது.

சொத்து , சுகம் எதை இழந்தாலும் பரவாயில்லை, உயிரை இழக்காதிருக்க தமிழினம் தன் தன் மானத்தையே இழந்து, இன்று அநாதை இனமாய் துவண்டு கொண்டிருக்கின்றது.

பயங்கரவாதம் அழிக்கப்படுகிறது என்ற போர்வையில் பாரிய இன அழிப்பே அரங்கேறிய பின்னர் பயங்கரவாதம் கூண்டோடு அழிக்கப்பட்டது என அரசாங்கத்தினால் சொல்லப்பட்டு அதற்கு வெற்றி விழாக் கொண்டாடப்பட்டாலும்,

இன்றுவரை பாதிக்கப்பட்ட தமிழினத்திற்கு பரிகாரம் ஏதும் வழங்கப்படவில்லை.

மாறாக இரத்த உறவுகளை நினைவுகூர முடியாதபடி பல தடைக்கற்களை தொடர்ந்து இட்ட வண்ணமே உள்ளனர் ஆட்சியாளர்கள்.

இறந்த உயிர்களை நினைவு கூர்ந்து அவர்கள் ஆத்மசாந்திக்கு ஒரு தீபமேனும் ஏற்ற அனுமதி தராத ஆட்சியாளர்கள் தமிழினத்திற்கு சுதந்திரத்தைத் தந்துவிடவா போகின்றார்கள்?

தீராத வலிபட்டு கொத்துக் கொத்தாய் இறந்து போன தமிழினத்திற்கு நீதி வேண்டும்.

அந்த நீதி உண்மையானதாகவும் நேர்மையானதுமாய் இருக்க வேண்டும்.

அதை சர்வதேச சமூகம் பெற்றுத்தர வேண்டும்.

இப்போது இதுவே தமிழினத்தின் மனக் கிடக்கை.

யார் அடித்தனரோ அவர்களே விசாரணை செய்யின், அந்த விசாரணை எவ்வாறு நீதியாய் அமையும்?

மாண்டு போன பல்லாயிரக் கணக்கான உறவுகளின் ஆத்மா சாந்தி பெற நாம் வீடுகளில் தீபமேற்றி அவர்தம் ஆத்ம ஈடேற்றத்திற்காய் பிரார்த்திப்போமாக.

அபிமன்யு

# மருத்துவமனைகளுடன் இணைந்து தேவையான உதவிகளை வழங்குங்கள்

## செல்வந்தர்களிடம் இராஜாங்க அமைச்சர் வேண்டுகோள்

(கொழும்பு)

**கொவிட் நோயாளிகளுக்கான வைத்தியசாலைகளில் தேவையான வசதிகளை செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு இலங்கையிலுள்ள செல்வந்தர்களிடம் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே கோரிக்கை விடுத்துள்ளார்.**

வைத்தியசாலைகளில் சிகிச்சைகளை தொடர்ச்சியாக முன்னெடுப்பதில் சிக்கல் நிலைமை காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலைகளில் ஒட்சிசனுக்கான தேவை அதிகரித்துள்ளதாகவும் தீவிர சிகிச்சைப் பிரிவு எண்ணிக்கைகளை அதிகரிக்க நேரிட்டுள்ளதாகவும் அதற்கான உபகரணங்கள் அதிகளவில் தேவைப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தங்களது பிரதேசங்களில் காணப்படும் வைத்தியசாலைகளுடன் இணைந்து தேவையான உதவிகளை வழங்குமாறு செல்வந்தர்களிடம் அமைச்சர் கோரியுள்ளார். (நி-4)

## 'இடுகம' மீள் பரிசீலனை

(கொழும்பு)

'இடுகம ' எனப்படும் 'செய் கடமை' கொவிட் நிதியத்தின கணக்கை பரிசோதிப்பதற்கான பொறுப்பு, தேசிய கணக்காய்வு அலுவலகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

நிதியத்தின் முகாமைத்துவ சபை இதனைத் தெரிவித்துள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவேற்றப்பட்ட காணொளியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-4)

# வாகன விபத்துகளில் ஐவர் மரணம்




(கொழும்பு)

நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலத்திற்குள் நாட்டில் இடம்பெற்ற வாகன விபத்துகளில் ஐவர் உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்த ஐவருள் மாத்தளை பொலிஸ் நிலையத்தின் விசேட குற்ற விசாரணைப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் ஒருவரும் அடங்குகிறார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (நி-4)

## அதிக தொற்றாளர்கள் கண்டியில் பதிவு

(கொழும்பு)

நாட்டில் நேற்று முன்தினம் கண்டறியப்பட்ட 2 ஆயிரத்து 386 கொரோனா நோயாளர்களில் அதிகமானவர்கள் கண்டி மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதிகபட்சமாக 338 நோயாளர்கள் கண்டியில் அடையாளம் காணப்பட்டுள்ளதாக கொரோனா வைரஸைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது. (நி-4)

# போக்குவரத்து கட்டுப்பாட்டை மீறிய 306 பேர் கைது

(கொழும்பு)

நேற்று முன்தினம் போக்குவரத்து கட்டுப்பாட்டை மீறிய குற்றச்சாட்டில் 306 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதனடிப்படையில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் இதுவரையில் 9,588 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை மேல் மாகாணத்திற்குள் நுழையும் மற்றும் மேல் மாகாணத்தை விட்டு வெளியேறும் 14 இடங்களில் நேற்று முன்தினம் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது 1,826 வாகனங்கள் சோதனை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த வாகனங்களில் பயணித்த 3,525 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் 42 வாகனங்களில் பயணித்த 92 பேர் மாகாண எல்லையில் வைத்து மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் இரத்த அழுத்தம்:-ஒரு நோய் நாடியா? நோய் முதல் நாடியா?



பேராசிரியர்
தி.குமணன்
பொது வைத்திய நிபுணர்.
யாழ்.மருத்துவ பீடம்.

"உணவே மருந்து" என்று கூறுகிறது திருமந்திரம். ஆனால் இன்று பலருக்கு மருந்தே உணவாகிற்று. ஒரு புறம் வளர்ந்துவரும் தொழில்நுட்பத்தால் எத்தகைய கொடுமையான நோயையும் குணப்படுத்த முடியும் எனும் நிலை உள்ளது. மறுபுறம் மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கை என்னவோ அதிகரித்துக் கொண்டுதான் செல்கிறது. திருமூலர் உடம்பைக் குற்றமுள்ளது என்று எண்ணினார். பின்பு இறைவன் குடியிருக்கும் கோயிலாக எண்ணி "ஊனுடம்பு ஆலயம்" என்றார். இந்த யாக்கையை இருக்கும் காலம் வரை பாதுகாத்தால் மட்டுமே ஒருவன் இகபர சுகத்தினை அடைய முடியும் என்பது கண்கூடு.

"நோய் நாடி முதல் நாடி
அது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச்செயல்" என்றார் வள்ளுவன்.

பல நோய் நாடிகளுக்கு காரணமாக சில நோய் முதல் நாடிகளே காணப்படுகின்றன. நோய் நாடியை தேடி மருத்துவம் செய்வதை விட அந்த சில நோய் முதல் நாடிகளை இயன்ற அளவு முன்னதாகவே கண்டறிந்து சரி செய்தால் "மருந்தே உணவு" என்ற நிலையிலிருந்து விடுபட முடியும். அவ்வாறான பிரதானமான நோய் முதல் நாடிகளே "உயர் இரத்த அழுத்தம்" மற்றும் "இரத்தத்தில் உயர் குளுக்கோஸ் அளவு".


கொவிட்-19 எனும் பெருந்தொற்றால் நொந்து போயிருக்கும் வேளை ஏன் இந்த இரத்த அழுத்தம் பற்றி ஒரு நோக்கு என்ற கேள்வி எழலாம். ஆனால் கொவிட் பெரும் தொற்று காவு கொள்ளும் உயிர்களை விட இந்த கொடிய உயர் இரத்த அழுத்தம் மனித குலம் தோன்றிய காலத்திலிருந்தே காவு கொண்ட உயிர்களின் எண்ணிக்கை கணக்கிலடங்காது. இந்த "சத்தமற்ற கொலையாளி" உண்மையில் ஒரு நோய் நாடியாகும். அதாவது பல நோய்களுக்கான மூல காரணியான ஒரு நிலையாகும்.

உயர் இரத்த அழுத்தம் உலகில் எத்திக்கிலும் வாழ்ந்தாலும் பேசப்படுகின்ற ஒரு தொற்றா நோய் நிலையாகும். இது ஒருவருக்கு பரம்பரை காரணங்களாலோ, வாழ்க்கை முறைகளாலோ அல்லது மிக அரிதாக வேறு நோய்க்காரணங்களாலோ ஏற்படுகின்றது.

உயர் இரத்த அழுத்த நிலை ஒருவருக்கு ஓரிரு நாட்களிலோ, வாரங்களிலோ அல்லது மாதங்களிலோ ஏற்படுவதில்லை. மாறாக படிப்படியாக பல வருடங்கள் கழித்தே உருவெடுக்கின்றது. இதன் காரணத்தால் உயர் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்களுக்கு அது கூட இருந்தே கொல்லுகின்றது என்ற உண்மை தெரிவதில்லை. யாரும் தமக்கு உயர் இரத்த அழுத்தம் இருப்பதாக சந்தேகிப்பதுமில்லை.

அதிர்ஷ்டவசமாக இந்த உயர் அழுத்த நிலையானது இரத்தமின்றி, ஊசியின்றி ஏன் மருத்துவரின் உதவியின்றி மிக இலகுவாக உங்களது குருதி அமுக்கத்தை பொருத்தமான தானியங்கு கருவி மூலம் நீங்களே பரிசோதிப்பதன் மூலம் கண்டுபிடித்துவிடக் கூடிய ஒரு நோய்க் காரணியாகும்.

"நோர்மன் கப்ளான்" எனும் உயர் இரத்த அழுத்தத்தின் பிதாமகன் இதைக் குறிப்பிடுகையில் "மனிதன் தனது வாழ்வில் தெரிந்துகொள்ள வேண்டிய அதி முக்கியமான ஒரு அளவிடை அவனது



**இன்று உலக உயர் இரத்த அழுத்த தினமாகும்.
அதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

குருதியமுக்கம் தான்" என்று குறிப்பிடுவார். இவ்வாறு தாமே தமது குருதியமுக்கத்தை அளவிடுவதே மருத்துவர் அல்லது ஒரு தாதி அளவிடுவதை விட சாலச்சிறந்தது என பல மருத்துவ ஆய்வுகள் எடுத்தியம்புகின்றன.

பல வளர்ந்த மேற்கத்தேய நாடுகளில் வருடாந்த மருத்துவ பரிசோதனையில் உயர் இரத்த அழுத்தத்தை கண்டுபிடித்து விடுகிறார்கள். ஆனால் எம் போன்ற வளர்முக நாடுகளில் ஒரு சிலருக்கே அவ்வாறான வாய்ப்பு ஏற்படுகின்றது. குறிப்பாக வாகனம் ஓட்டுவதற்கான அனுமதியைப் பெறும் போது பலருக்கு உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு போன்ற தொற்றா நிலைகள் இருப்பது கண்டறியப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

உயர் இரத்த அழுத்தம் ஒரு நோய் என்பதை விட ஒரு அதி முக்கியமான நோய்க்காரணி (Risk factor) என்றே குறிப்பிடலாம். பக்கவாதம், மாரடைப்பு, கண்பார்வை இழப்பு, சிறுநீரக பாதிப்பு, ஞாபக மறதி போன்ற பல நோய்களுக்கு மிகப் பிரதானமான நோய்க்காரணி உயர் இரத்த அழுத்தமே ஆகும்.

பரம்பரையாக வரும் உயர் இரத்த அழுத்தமே கிட்டத்தட்ட **80- 90%** ஆனவர்களைப் பாதிக்கின்றது. பொதுவாக இது 35 - 40 வயதிற்கிடையில் கண்டுபிடிக்கப்படுகிறது. அவ்வாறு கண்டுபிடிக்கத் தவறியவர்கள் சுமார் 50 வயதிற்கு மேல், இங்கு குறிப்பிட்ட பாதிப்புக்கள் ஏற்படும் போதுதான் கண்டுபிடிக்கப்படுகின்றனர். அப்படி கண்டுபிடிக்கும் பட்சத்தில் அவர்களது குருதியமுக்கம் மிக உயர்வாக காணப்படும். பாதிக்கப்பட்ட இதயம், மூளை, சிறுநீரகம் போன்றவற்றிற்குரிய சிகிச்சையையும் உயர் குருதி அழுத்த மாத்திரைகளையும் ஒருங்கே சேர்த்து அதிகளவு மாத்திரைகளை நோயாளிகள் உள்ளெடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை அப்போது ஏற்படும். மாறாக உயர் இரத்த அழுத்தத்தை ஆரம்ப கட்டத்திலேயே கண்டுபிடித்தால் ஒரு சில மாத்திரைகளுடனே அவர்கள் தங்கள் பெரும்பாலான வாழ்க்கைக் காலத்தை கழிக்கலாம்.

இந்த உயர் இரத்த அழுத்தம் ஒரு பூரணமாக குணப்படுத்தக்கூடிய நோயல்ல, மாறாக கட்டுப்பாட்டில் வைத்திருக்கப்பட வேண்டிய ஒன்று. எனவே அதற்குரிய மாத்திரைகளை அவர்கள் வாழ்நாள் முழுவதும் உள்ளெடுக்க வேண்டியிருக்கும். இம் மாத்திரைகள் பல நாடுகளில் பல ஆண்டுகாலம் பரிசோதிக்கப்பட்டு மிக பாதுகாப்பானவை. மனித குலத்துக்கு மிக அத்தியாவசியமானவை என்று பரிந்துரைக்கப்படுகின்றது. இம் மாத்திரைகளால் ஏற்படும் பக்கவிளைவுகள் மிக எளிமையானவை, தற்காலிகமானவை மற்றும் அரிதாக ஏற்படுகின்றவை. உயர் இரத்த அழுத்தம் என்ற பாரதூரமான ஒரு சுகாதார பிரச்சினையுடன் ஒப்பிடும் போது புறக்கணிக்கத்தக்கவை. உதாரணமாக உயர் இரத்த அழுத்தத்தால் நாளாந்தம் பல்லாயிரக் கணக்கான இளம் உயிர்கள் மூளையில் இரத்தக்கசிவு ஏற்பட்டு உயிரிழக்கின் றனர். இவர்களின் உயர் இரத்த அழுத்தம் முன்னதாகவே கண்டறியப்பட்டிருந் தால் இவ்வுயிரிழப்புக்கள் நூற்றுக்கு நூறு வீதம் தடுக்கப்பட்டிருக்கலாம். குடும்பத் தலைவனையோ தலைவியையோ இழக்காமல் எத்தனையோ குடும்பங்களை தவிக்கவிடாமல் காப் பாற்றியிருக்கலாம்.

எனவே தம்மீதும் தம் குடும்பத்தின் மீதும் அன்புள்ள ஒவ்வொருவரும் தங்கள் இரத்த அமுக்கத்தை அளவிடாமல் இருந்திருந்தால் இந்த வைகாசி மாதத்தில் அதாவது உலக உயர் இரத்த அழுத்த விழிப்புணர்வு மாதமாகிய இக்காலத்திலாவது அருகிலுள்ள ஒரு சுகாதார நிலையத்திற்கு சென்று தமது குருதியமுக்கத்தை அறிந்து கொள்ளுங்கள்.

வசதியுள்ளவர்கள் ஒரு குருதி அமுக்கத்தை அளக்கக்கூடிய தானியங்கு கருவியை கொள்வனவு செய்தல் ஒரு நல்ல முதலீடு ஆகும். அதைப்பல ஆண்டுகள் பேணிப் பாதுகாக்க முடியும். ஒருவரது உயர் அமுக்கம் கண்டறியப்பட்டால் எந்த அவசரமுமின்றி அதை மீள உறுதிப்படுத்திக் கொண்டு மருத்துவர் கூறும் சரியான வாழ்க்கை முறையைப் பின்பற்றி மாத்திரைகளை கிரமமாக உள்ளெடுக்க வேண்டும். இது உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் ஆற்றும் ஒரு கடமையாகும்.

## சீரற்ற காலநிலையால் 9 மாவட்டங்கள் பாதிப்பு



(கொழும்பு)

சீரற்ற காலநிலை காரணமாக 9 மாவட்டங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, கொழும்பு, களுத்துறை, கம்பஹா, கேகாலை, புத்தளம், கண்டி குருநாகல், காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. (நி-4)

## அதிகரிக்கும் தொற்றாளர்கள் ஆபத்தான நிலையில் இலங்கை

### உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

கொவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுவது தொடர்பில் இலங்கை மோசமான நிலையை அடைந்துள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கையில் கொவிட் தொற்றாளர்கள் வைத்தியசாலைகளை அனுமதிப்பதில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் உலக சுகாதார அமைப்பின் இயக்குநர் டெட்ரோஸ் அதானோம் கேப்ரியாசெஸ் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தியாவில் காணப்படும் நிலைமை தொடர்பில் தீவிர அவதானம் செலுத்தப்படுகின்ற நிலையில், அதற்கு மேலதிகமாக நேபாளம், இலங்கை, வியட்நாம், கம்போடியா, தாய்லாந்து மற்றும் எகிப்து ஆகிய நாடுகளில் தேவைகள் உள்ள நாடுகள் என உலக சுகாதார அமைப்பின் இயக்குநர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வைரஸ் தொற்றினைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரே வழி தடுப்பூசி போடுவதும் சரியான சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதும் மாத்திரமே என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இறக்க வேண்டுமானால் முதலில் வாழ்ந்திருக்க வேண்டுமன்றோ?*

*– தோரோ*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# திருமண நிகழ்வுக்கும் அனுமதி வழங்க வேண்டும்

உலகம் முழுவதையும் ஆட்டிப் படைக்கும் கொரோனாத் தொற்றினால் மக்கள் சமூகம் படும் பாடு சொல்லிமாளா.

அந்தளவுக்கு உலகப் பிரளயம்போல கொரோனாத் தொற்று கோரதாண்டவம் ஆடுகிறது.

இந்த ஊழிக்கால பிரளயத்துக்கு இலங்கையும் விதிவிலக்கல்ல.

அண்மைக்காலமாக இலங்கையில் கொரோனாத் தொற்று வேகமாகப் பரவி வருவதுடன் இறப்புக்களின் எண்ணிக்கையும் உயர்வடைந்து செல்கிறது.

நிலைமை இதுவாக இருக்கையில், கொரோனாத் தொற்றில் இருந்து மக்களைப் பாதுகாக்கின்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த மூன்று நாட்கள் நாடு முழுமையிலும் பயணத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

தவிர, கோயில் திருவிழாக்கள் உட்பட பொதுநிகழ்வுகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதில் வைகாசி மாதம் சைவாலயங்களில் மஹோற்சவம் நடைபெறகின்ற காலமாக இருப்பதால், மஹோற்சவங்களை நடத்த முடியவில்லையே என்ற கவலை அந்தந்த ஆலயத்துடன் சம்பந்தப்பட்டவர்களை வாட்டி வதைக்கிறது.

பொதுவில் ஏனைய சமய வழிபாடுகளினின்றும் சைவ சமய வழிபாடு வித்தியாசமானது.

ஆகம விதிப்படி ஆலய மஹோற்சவங்கள் அந்தந்தக் காலங்களில் நடந்தாக வேண்டும். இல்லையேல் மகாகும்பாபிஷேகம் செய்து மஹோற்சவம் நடத்தப்பட வேண்டும் என்பது நியதி.

இதற்கு மேலாக, ஆலய மஹோற்சவம் உரிய காலத்தில் நடைபெறாவிட்டால், அது அந்த ஊருக்கும் அந்த மக்களுக்கும் நல்லதல்ல என்ற ஐதீகமும் உண்டு.

இவை ஒருபுறமிருக்க, பதிவுத் திருமண நிகழ்வை பதினைந்து பேருடன் நடத்தலாம் என்று தீர்மானித்தவர்கள் திருமண நிகழ்வு நடத்துவதற்குத் தடைவிதித்துள்ளனர்.

பொதுவில் சைவ சமயத்தவர்களைப் பொறுத்தவரை திருமணம் என்பது இல்லற வாழ்வில் மிகவும் முக்கியமான சடங்கு.

மாதம், நாள், நட்சத்திரம் என்பன கணித்து மாங்கல்யதாரணம் இடம்பெறும்.

அந்த வகையில் வைகாசி மாதம் என்பது திருமணச் சடங்கு நடத்துவதற்கு உகந்த மாதமாகும்.

அதேநேரம் பதிவுத் திருமணம் செய்துவிட்டு, உரிய மாதம் வரும்வரை காத்திருந்து திருமணம் செய்கின்ற வழமை நம்மிடத்தில் இருப்பதால்,

பங்குபற்றக்கூடியவர்களின் எண்ணிக்கையை வரையறை செய்து திருமண நிகழ்வை நடத்துவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் அனுமதி வழங்க வேண்டும்.

அதாவது பதிவுத் திருமணத்தில் பங்குபற்றக்கூடியவர்களின் எண்ணிக்கை போன்று திருமண நிகழ்வுக்கும் பங்குபற்றக் கூடியவர்களின் எண்ணிக்கையை வரையறுத்துக் கொண்டு, திருமணத்தை நடத்துவதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்பது பலரதும் கோரிக்கையாகும்.

# நோய் அறிகுறியற்ற தொற்றாளர்களுக்கு வீடுகளிலேயே சிகிச்சையளிக்க தீர்மானம்

## இராணுவத் தளபதி சவேந்திர சில்வா அறிவிப்பு

(கொழும்பு)

"நாட்டில் தற்போது நாள்தோறும் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம்காணப்பட்டு வருகின்றனர். இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள தொற்றாளர்களில் தற்போது 27 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த நிலையில், இன்று திங்கட்கிழமை தொடக்கம் நோய் அறிகுறி இல்லாமல் அடையாளம் காணப்படும் தொற்றாளர்கள் வீடுகளில் இருந்தே சிகிச்சை பெற வேண்டும் என்ற முடிவுக்கு அரசு வந்துள்ளது. சிகிச்சை இடங்களில் காணப்படும் இடப்பற்றாக்குறையே இதற்குப் பிரதான காரணமாகும்" இவ்வாறு இராணுவத் தளபதியும் கொரோனாக் கட்டுப்பாட்டுச் செயலணியின் தலைவருமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அறிகுறிகளற்ற தொற்றாளர்களை வீடுகளில் வைத்து சிகிச்சையளிக்கவுள்ளதாக இராஜாங்க அமைச்சர்களான பேராசிரியர் சன்ன ஜயசுமன மற்றும் சுதர்சினி பெர்ணான்டோ புள்ளே ஆகியோர் கடந்த வாரம் தெரிவித்திருந்தனர். ஆனாலும், அவ்வாறானதொரு திட்டம் இல்லை என்று இராணுவத் தளபதி மறுத்திருந்தார். இந்த நிலையிலேயே மேற்படி கருத்தை அவர் முன்வைத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மருத்துவர்களால் வீடுகளில் கவனிக்கப்படும் நோய் அறிகுறி இல்லாத தொற்றாளர்கள் 14 நாட்களுக்குத் தனிமைப் படுத்தப்படுவார்கள். வீடுகளும் 14 நாட்களுக்குத் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும். அந்த வீட்டில் இருக்கும் ஏனையோரும் வெளியில் செல்ல முடியாதவாறு தனிமைப்படுத்தப்படுவார்கள். வீடுகளில் கவனிக்கப்படும் நோய் அறிகுறி இல்லாத தொற்றாளர்களின் நிலைமை மோசமடைந்தால் மட்டும் அவர்கள் மருத்துவ மனைகளில் சேர்க்கப்படுவார்கள்" என்றார். (ஞா)

# ஓட்டமாவடியில் இதுவரை 156 உடல்கள் அடக்கம்

(மட்டக்களப்பு)

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சூடுபத்தினசேனை பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாத்திரம் பத்தொன்பது உடல்கள் அடக்கம் செய்யப்பட்டதுடன், இது வரைக்கும் நூற்றி ஐம்பத்தாறு உடல்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளதாக ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம். தாரிக் தெரிவித்தார்.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரித்த நிலையில் ஓட்டமாவடி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை மாலை இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேறகண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், சூடுபத்தினசேனையில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் நூற்றி ஐம்பத்தாறு உடல்கள் அடக்கம் செய்யப்பட்டன. இதில் இரண்டு வெளிநாட்டவர்கள், பௌத்த மதத்தவர் ஒருவர், இந்து மதத்தவர் மூன்று, கிறிஸ்தவ மதத்தவர் ஆறு பேரின் உடல்கள் மற்றும் நூற்றி நாற்பத்தி நான்கு இஸ்லாம் மதத்தவர்களின் உடல்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன என்றார். (ஞா)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** அம்பன், அம்பன் மருத்துவமனை, கடற்கரை பகுதி மணற்காடு, குடத்தனை, குடத்தனை நீர் வழங்கல், மணற்காடு, நடுக்குட த்தனை, பொற்பதி, வலிகண்டி ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** குருக்கள் புதுக்குளம்- மணியர் குளம், பூவரசங்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும். (நி-4)

# இரத்ததான முகாம்

(குப்பிழான்)

வேலணைப்பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் வருடாந்த இரத்ததான முகாம் இன்று 17 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி முதல் மேற்படி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறும். குறித்த இரத்ததான முகாமில் குருதிக் கொடை ஆர்வலர்கள் அனைவரையும் சுகாதார நடைமுறைகளுக்கமைய கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-4-18)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## நான் என்ற தத்துவமே நாம்



தண்ணீரே சமுத்திரம், ஆறு, ஏரி, குளம், குட்டை, மழை, மேகம் என்ற பல பெயர்களால் அழைக்கப்படுவது போல "நான் என்று சொல்லும் அறிவின் தத்துவமே - காந்த சக்தி அலை இயக்கமே - பல்வேறு உருவில் அதனதன் தன்மைக்கேற்ப இயக்கும் சக்தியாகவும் உணரும் ஆற்றல் நிலையாகவும் இருக்கிறது.

ஆகையால், இந்த "நான்" என்ற தத்துவம்தான் - சக்திதான் - நாம் என்ற பலராக, அநேக கோடி சீவன்களாக மனிதர்களாக, அறிவியக்கங்களாக இருக்கிறது.

உருவ அளவில் மனதுக்கு எல்லைகட்டிக் கொண்டு பல நாடுகளிலும் சிதறி வாழ்ந்து, தேசம், இனம், ஜாதி, மதம் என்னும் வேறுபாடுகளைக் கற்பித்துக் கொண்டு, அதனால் வாழ்க்கையில் பலவிதமான துன்பங்களையும் அனுபவித்துவிட்டோம். ஆழ்ந்து ஆராய்ந்த போது, அறிவின் தத்துவமாகிய ஆன்ம நிலையை அறிந்து விட்டோம். அந்நிலையில் அனைத்துயிரும் ஒன்றென்று அறிந்தோம். இந்த விரிந்த மனநிலையில் அனைவரும் வாழ வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீண்டெழுந்த யாழ்ப்பாண பொதுசன நூலகம்

## 39 நூல்களிலிருந்து அதன் வரலாற்றுத் தேடல்



திருமதி.சுகந்தினி சதாசிவமூர்த்தி பிரதம நூலகர், யாழ்ப்பாணம் பொது நூலகம்
கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

### முதலாம் மாடியில் தொழிற்படும் சேவைகள்

1.உசாத்துணைப்பிரிவு (**Reference Services)**

இப்பகுதியில் ஏறத்தாழ 34,000 நூல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. பல்வேறுபட்ட கலைக்களஞ்சியங்கள். அகராதிகள், தேசப்படப் புத்தகங்கள், வழிகாட்டும் நூல்கள். அட்டவணைகள், புள்ளி விவரத் திரட்டுகள் என்பனவற்றுடன் பல துறைசார்ந்த முக்கிய நூல்கள் தமிழ், ஆங்கில மொழிகளில் உள்வாங்கப்பட்டுள்ளன. இவற்றுள் இந்து சமயம், வரலாறு, சமூகவியல், மொழி, இலக்கியம், நூலகவியல் ஆகிய துறைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டு தனித் தனிப் பிரிவுகளாக அமைக்கப்பட்டுள்ளன. அவற்றிற்கு மேலாக விசேட அறிக்கைகள் போன்றனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அத்துடன் நூல்களுடன் இணைக்கப்பட்டிருக்கும் இறுவெட்டுக்களும் பயன்படுத்தி படிப்பதற்குக் கணனி வசதிகள் செய்யப்பட்டுள்ளன. 40 பேர் ஒரே தடவையில் இருந்து வாசிப்பதற்கு ஏற்ற வகையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியை க.பொ.த.(சாத) ,க.பொ.த.(உ.த.) மாணவர்கள். உயர் கல்விக்கான தேடல்களைச் செய்வோர், ஆய்வாளர்கள் எனப் பல்வேறுபட்ட பல வாசகர்கள் தினமும் பயன்படுத்துகிறார்கள்.

உசாத்துணைச் சேவையினை நாடிவரும் மாணவர்கள் மற்றும் வாசகர்கள் தேவை கருதி தற்காலத்திற்கு ஏற்றவிதத்தில் இப்பகுதி சீனப் புகையிரத பொறியியல் குழுவினரின் ( **China Railway Engineering Group Co Ltd)** உதவியோடு குளிரூட்டப்பட்டு போட்டோ பிரதியெடுக்கும் வசதியோடு இயங்குகின்றது.

2. விசேடசேர்க்கைப் பகுதி **(SPECIAL COLLECTION SECTION)**

இலங்கை எழுத்தாளர்களின் படைப்புகள், இலங்கை பற்றி வெளிநாடுகளில் வெளிவந்த பிரசுரங்கள் என்பன உள்ளடங்கிய ஏறத்தாழ 12,000 நூல்களைக் கொண்ட ஒரு பகுதியும், விசேடமாக யாழ். நூலகத்திற்கெனத் தனியார் தங்களது நூலக நூல்களை அன்பளிப்புச் செய்தபோது அவற்றைத் தனியாகவும் கொண்ட பகுதிகளாகப் பாதுகாக்கப்படுகின்றன. இவ்வாறாகக் கிடைக்கப் பெற்ற அன்பளிப்பு நூல்களின் பிரதிகள் ஏற்கெனவே நூலகத்தில் இருப்பதால் தனியார் நூலகமாக அப்படியே பாதுகாக்கப்படுகினறது. பிரபல கல்வியாளர் சோ.கந்தையா வைத்தியநாதன், முன்னாள் அமைச்சர் பீற்றர் கெனமன், பிரபல தொழிற்சங்க வாதிகளான கு.துரைசிங்கம், கலாநிதி அழகியவண்ணா, முன்னாள் உள்ளூராட்சி ஆணையாளர் சுந்தரம் டிவகலால, சென்னை ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் வழங்கிய இலங்கை நூல்கள், பிரபல தமிழ் அபிமானி கிருஷ்ணா வைகுந்தவாசன், பேராசிரியர் க.சிவத்தம்பி, பேராசிரியர் சிவசாமி மற்றும் ஏனைய நிறுவனங்கள் வழங்கிய நூல்கள் என 10,000 வரை இப்பகுதியில் சேர்த்து வைக்கப்பட்டுள்ளன.

அவற்றிற்கு மேலாக அமெரிக்கத் தூதுவராலயத்தால் வழங்கப்பட்ட58 நுண்சுருள்கள் microfilm இங்கு வைக்கப்பட்டுள்ளன. இவை கடந்த நூறு வருடங்களில் இலங்கையில் வெளிவந்த இந்து சாதனம், ஈழநாடு, உதயதாரகை, மோனிங் ஸ்ரார் **(MORNING STAR)**போன்ற இடை நிறுத்தப்பட்ட பத்திரிகைகளாகும். அவற்றை **microreader** மூலம் வாசித்துத் தகவல் பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக **GTZ** நிறுவனமும், அமெரிக்கத் தகவல் நிறுவனமும் கருவிகளை வழங்கியுள்ளன. மேலும் நூலகத்திற்கு அன்பளிப்பாகக் கிடைத்த கிட்டத்தட்ட 1700 ஏடுகள் இங்கு பராமரிக்கப்படுகின்றன. இவ் ஏடுகள் சாஸ்திரம் மற்றும் சித்த மருத்துவம் சம்பந்தமானவையாகும். முத்திரை அல்பம், ஒட்டுப் புத்தகம் போன்றனவும் இங்கு மக்கள் பார்வைக்குத் தயாராக உள்ளன.

3.இளையோர்பகுதி **(Youth Corner)**

இப்பகுதியை 15 வயது முதல் 19 வயது வரையான மாணவர்கள் பயன்படுத்த முடியும். இங்கு ஏறத்தாழ 3500 நூல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மாவட்ட மாணவர்களின் ஆங்கில அறிவை மேம்படுத்துவதற்காக இளையோர் பகுதி சிங்கப்பூர் சர்வதேச நிறுவனத்தால் ஸ்தாபிக்கப்பட்டு 04.04. 2014 இல் சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் கே.சண்முகத்தினால் கையளிக்கப்பட்டது. இச்சேவை, மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது.

4.**கணினிப்பிரிவு** (Computer section)

யுனெஸ்கோ நிறுவனம் போர்ட் பவுண்டேசனின் நிதிஉதவியுடன் பல அளப்பரிய வேலைத் திட்டங்களை இந்நூலகத்திற்கு வழங்கியது. ஆ[illegible] கேற்றவாறு [illegible]கத்தில் தனியொரு கணனிப் பகுதி உருவாக்கப்பட்டு இணையத்தள வசதி செய்யப்பட்டது. இதற்காக 10 கணனிகள் ஒதுக்கப்பட்டுள்ளது.

இப் பகுதி தகவல் தொழில்நுட்ப உதவியாளர் ஒருவரையும் நியமித்துச்சரிவர இயங்குகிறது. மொத்தமாக 20 மில்லியன் ரூபாய் செலவு செய்தனர். இதன் மூலம் யாழ். நூலகத்தில் முதன்முதலாக இணையத்தள வசதி செய்து கொடுக்கப்பட்டது. ஒரே நேரத்தில் 10 பேர் இணையத்தின் மூலம் தகவல்களைப் பெற வசதி செய்யப்பட்டுள்ளது. வாசகர்களுக்கு இலவசமாக இச்சேவை வழங்கப்படுகிறது.

இக்கணனிப் பிரிவில் மேலும் பல வசதிகள் செய்யப்பட்டன. வீடியோ காட்சி மூலம் தகவல்களை வழங்குவதற்கான பிரிவும் ஓடியோ மூலம் தகவல்களைப் பெறுவதற்கான பிரிவும் தனித் தனியாக உருவாக்கப்பட்டு நிகழ்ச்சிகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டதுடன் பல துறை சார்ந்த ஒலி, ஒளி நாடாக்கள் 1000 பெறப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன. இவற்றுள் கணிதம், விஞ்ஞானம், ஆங்கில மொழி கலைக்களஞ்சியங்கள், உலக அறிவியல் சார்பானவை மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். மேலும் மாணவர்களின் பல்கலைக் கழக அனுமதிக்கான விண்ணப்பங்கள், பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் **online** மூலம் அனுப்புவதற்கான வசதி செய்யப்பட்டுள்ளது.

பொது நூலகமானது தன்னியக்கமாக்கல் **(AUTOM ATION)** செய்யப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் அதற்கானவேலைகள் 2016 இல் ஆரம்பிக்கப்பட்டு ஒரு லட்சம் வரையிலான புத்தகங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டு வாசகர்கள் சுயமாக [illegible]க்கூடிய வசதி செய்யப் [illegible]து. தற்சமயம் நூலகம் கணனி மயப்படுத்தப்பட்டுள்ளது,

5. .கேட்போர் கூடம் **(AUDITORIUM)** புனரமைப்புத் திட்டமிடும் போது நூலகத்தில் ஒரு கேட்போர் கூடம் அவசியம் என்பது உணரப்பட்டது. கல்வி, கலாசாரம் சார்பான கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள், சொற் பொழிவுகள், விவாதங்கள் ஏற்பாடு செய்வது நூலகச் சேவையின் முக்கிய அம்சம் என்பதால், 200 பேர் இருந்து கேட்கக் கூடியதாக நவீன வசதிகளுடன் கூடிய கேட்போர் கூடம் உருவாக்கப்பட்டுள்ளது. இக்கேட்போர் கூடம் யாழ்ப்பாணத்தில் மிகவும் பிர பலமாக உள்ளது. அநேகமான பயிற்சிப்பட்டறைகள், கருத்தரங்குகள் என்பன இங்கேயே நடத்தப்படுகின்றன.

### இரண்டாம் மாடியில் உள்ள சேவை

இம் மாடியில் தனியே ஒரு பகுதி மட்டும் உண்டு. இப் பகுதி நூலகம் மீள் புனரமைப்பு செய்யப்பட்டபோது, புத்தக வெளியீடுகள் செய்வதற்கும், கல்வி கலாசாரம் சார்பான கருத்தரங்குகள் நிகழ்த்துவதற்குமான ஒரு பிரிவாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் இது 50 பேர் பங்குபற்றக் கூடியதாக நவீன வசதிகளுடன் கூடிய குவிமாட மண்டபமாக உருவாக்கப்பட்டுள்ளது.

### நடமாடும் நூலக சேவை




### நடமாடும்நூலகச்சேவை

சிங்கப்பூர் சர்வதேச நிறுவனத்தின் உதவித்திட்டத்தின் கீழ் நூலகத்திற்கு வர முடியாத மக்களுக்கு நூல்கள் சென்றடையக் கூடியவிதமாக நடமாடும் நூலக சேவையை **(MOBILE LIBRARY SERVICE)** ஏற்பாடு செய்வதற்கு வசதி செய்யும் வகையில் வாகனம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேலுமொரு...

பாதிக்கப்பட்ட திசாமஹாராமவைச் சேர்ந்த 35 வயது கர்ப்பவதிப் பெண் ஒருவர் மலாபே நெவில் பெர்னாண்டோ மருத்துவ மனையில் உயிரிழந்துள்ளார்.

நாட்டில் கோவிட் - 19 நோயினால் பாதிக்கப்பட்ட நான்காவது கர்ப்பவதிப் பெண்ணின் உயிரிழப்பு இதுவாகும். (ஞா)

## துப்பாக்கிச் சூடு...

ஒருவர் மரணமடைந்துள்ளதாக பொத்துவில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொத்துவில் - 15 களப்புக்கட்டையைச் சேர்ந்த நபரே இவ்வாறு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளார்.

துப்பாக்கி சூட்டு சம்பவத்துடன் தொடர்புடையதாக கருதப்படும் சந்தேகநபர்கள் இருவரை பொத்துவில் பொலிஸார் கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளனர். (ஞா)

## ஜீன் மாதத்தில்...

யியல் துறையின் பேராசிரியர் ஹேமந்த சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

தொற்று நோயின் தீர்மானகரமான சந்தர்ப்பத்தை நாடு என்ற வகையில் எதிர்நோக்க நேரிடும் எனவும் அவர் கூறியுள்ளார்.

தற்போது தொற்று நோயின் தீர்மான கரமான சந்தர்ப்பத்திற்கு நாடு வந்துள்ளது. நாளுக்கு நாள் தொற்றாளர்கள் மற்றும் மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இலங்கையில் தற்போது காணப்படுவது தொற்று நோய் பரவலின் உச்ச நிலையல்ல.

ஜுன் மாதமளவில் தொற்று நோய் பரவல் உச்சமடையலாம் என நாங்கள் நினைக்கின்றோம். தற்போது எமது பாதுகாப்பை அதிகரித்து கொள்ள வேண்டும் எனவும் ஹேமந்த சேனாநாயக்க குறிப்பிட்டுள்ளார். (ஞா)

## வெசாக் வாரத்...

டுப்பாடுகள் இன்று அதிகாலை தளர்த்தப்படுகிறது.

இதன் பின்னர் அடுத்த வார இறுதியில் மீண்டும் பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு அது வெசாக் வாரம் நிறைவடையும் வரை அமுல்படுத்தப்படலாம் என கூறப்படுகிறது.

நாட்டில் தற்போது காணப்படும் கோவிட் பரவல் காரணமாக வெசாக் வாரம் முழுவதும் பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும் என சுகாதாரத் துறையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த கோரிக்கைக்கு அமைய அரசாங்கம் பயணக் கட்டுப்பாடுகளை விதிக்க வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது. (ஞா)

## தொற்றாளர்...

காட்டாத நோயாளர்கள் இன்று முதல் வீட்டிலேயே இருந்து சிகிச்சை பெற அனுமதிக்கப்படுவர் என்று ஆரம்ப சுகாதார இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்திருந்தார்.

இவ்வாறு வீட்டிலிருந்து சிகிச்சை பெறுபவர்கள் கொரோனாக் கட்டுப்பாட்டு நிலையத்தால் தொடர்ந்தும் கண்காணிக்கப்படுவார்கள் என்றும் அவர் கூறினார்.

இந்தநிலையில், வீடுகளில் வைத்து சிகிச்சையளிப்பதற்குப் போதியளவு உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாததால் மேலும் தொற்றாளர்கள் அதிகரிக்கக்கூடும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

இந்த யோசனை முன்வைக்கப்பட்ட சகல சந்தர்ப்பங்களிலும் தமது தரப்பிலிருந்து சில கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

"வீடுகளில் தனிமைப்படுத்தப்படுகின்றவர்களுக்குச் சிகிச்சையளிப்பதற்கான வைத்தியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது.

அத்துடன், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களில் போக்குவரத்துப் பிரச்சினைகள் காணப்படுவதோடு, தொடர்ந்தும் பழைய வாகனங்களே பயன்படுத்தப்படுகின்றன.

இதேவேளை, வீடுகளில் தனிமைப்படுத்தப்படுகின்றவர்களுக்கு, அவசர தேவைகளுக்கு வழங்குவதற்கான போதிய மருந்துப் பொருட்களும் வைத்திய அதிகாரி அலுவலகங்களில் இல்லை" என்றார்.

இதேவேளை, இன்று திங்கட்கிழமை தொடக்கம் நோய் அறிகுறி இல்லாமல் அடையாளம் காணப்படும் தொற்றாளர்கள் வீடுகளில் இருந்தே சிகிச்சை பெற வேண்டும் என்ற முடிவுக்கு அரசு வந்துள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## 55 பேருக்கு...

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை ஆய்வுகூடத்தில் 642 பேரின் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 9 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 20 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 8 பேரும் வவுனியா மாவட்டத்தில் 11 பேரும் மன்னார் மாவட்டத்தில் 07 பேரும் என 55 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு வைத்தியசாலையில் 8 பேரும் புதுக்குடியிருப்பு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 12 பேரும் என 20 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்கள் அனைவரும் ஆடைத் தொழிற்சாலையைச் சேர்ந்தவர்கள்.

கிளிநொச்சி வைத்தியசாலையில் 5 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. பளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த மூவருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

பூவரசங்குளம் வைத்தியசாலையில் 6 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

மன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 7 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர்கள் 6 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட 3 பேருக்கு கோவிட் - 19 நோய்த் தொற்று உள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பருத்தித்துறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இருவருக்கும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை, சாவகச்சேரி மற்றும் சங்கானை பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் தலா ஒருவருக்கும் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது" என்றும் வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். ([illegible])

# மே 18இல் பாராளுமன்றத்துக்கு கறுப்பு ஆடையுடன் செல்லவுள்ள தமிழ்க் கட்சி எம்.பிக்கள்

(கொழும்பு)

நாளை நடைபெறும் பாராளுமன்ற அமர்வுக்கு கறுப்பு ஆடையுடன் செல்ல தமிழ்த் தேசிய பரப்பில் இயங்கும் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் முடிவு செய்துள்ளனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் கூட்டணி ஆகிய கட்சிகளின் எம்.பிக்கள் இந்த முடிவை எடுத்தனர்.

கடந்த மாதம் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்றத்திற்குள் கறுப்பு ஆடை அணிந்து வந்த சமயத்தில், அதை பார்த்த தமிழ் எம்.பிக்கள், அன்றைய தினமே இந்த முடிவை எடுத்தனர்.

அன்றைய தினமே கூட்டமைப்பு எம்.பி சிறீதரன், மற்றைய பாராளுமன்ற உறுப்பினர்களிடம் இந்த யோசனையை கூற, ஏனையவர்கள் அதை ஆமோதித்தனர்.

அண்மையில் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், யாரும் தடுக்க முடியாத விதத்தில் அஞ்சலி செலுத்துவோம் என தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## தருமபுரம்...

மேலதிக தீர்மானம் இன்று எடுக்கப்படலாம் என சுகாதார பிரிவு தெரிவிக்கின்றது.

நேற்றைய பிசிஆர் முடிவுகளின் அடிப்படையில் கிளிநொச்சி தருமபுரம் பிரிவில் 8 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களில் 7ஆம் யூனிற் பகுதியில் 7 பேரும் 5ஆம் யூனிற் பகுதியில் ஒருவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்கள் பிசிஆர் பரிசோதனைகளின் பின்னரே தனிமைப்படுத்தப்பட்டவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் உடன் அமுலுக்கு வரும் வகையில் குறித்த பகுதி சுகாதார தரப்பினர் மற்றும் இராணுவத்தினரின் விசேட கண்காணிப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாக மாவட்ட கோவிட் செயலணி தெரிவித்துள்ளது.

மேலதிக விடயங்கள் தொடர்பில் இன்று ஆராய்ந்து தீர்மானம் எட்டப்படும் என மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார். (ஞா-100,316)

## வீடொன்றினுள்...

மீறி நுழைந்த கும்பல் ஒன்று வீட்டின் ஜன்னல் கண்ணாடிகளை அடித்து நொறுக்கியும் மோட்டார் சைக்கிள், துவிச்சக்கரவண்டி உள்ளிட்ட பொருட்கள் என்பவற்றையும் அடித்து உடைத்து அட்டகாசம் புரிந்து விட்டு தப்பிச் சென்றுள்ளது.

நாடளாவிய ரீதியில் பயணத் தடை அமுலில் உள்ள நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 6 மணியளவில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த தாக்குதல் சம்பவத்தில் வீட்டில் இருந்த மூன்று பேர் காயமடைந்துள்ளதாகவும், வீட்டிலிருந்த இளைஞன் ஒருவரின் தங்கச் சங்கிலி ஒன்றையும் தாக்குதலாளிகள் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 20க்கும் மேற்பட்டவர்கள் உள்ளடங்கிய குழு மோட்டார் சைக்கிள்களில் வந்து அட்டகாசம் புரிந்துள்ளனர்.

இதேவேளை குறித்த கும்பல் அப்பிரதேசத்தில் நீண்ட நேரமாக நின்று அட்டகாசம் புரிந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஞா-33)

## கொரோனாவால்...

வெளியிட்டுள்ளது.

இதனால் இலங்கையில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி இதுவரையில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 962 ஆக

## கொடிகாமம் சந்தை மீளவும் திறக்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் சந்தை மற்றும் கடைத் தொகுதிகள் நாளை செவ்வாய்க்கிழமை முதல் வர்த்தக நடவடிக்கைகளுக்காக மீளத் திறக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றுக் காரணமாக கொடிகாமம் சந்தை கடந்த 2ஆம் திகதி திகதி தொடக்கம் மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கொரோனாத் தொற்றுக்கு உள்ளான 2,275 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டிருந்தமையும் சுட்டிக் காட்டத்தக்கது. (ஞா)

## அடையாள...

வித்துள்ளார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைக் கூறினார்.

கடந்த வியாழக்கிழமை முதல் நாடு முழுவதும் அமுலில் உள்ள கடுமையான பயணக் கட்டுப்பாட்டு நடைமுறை இன்று அதிகாலை 4 மணியுடன் முடிவடையும்.

இன்று அதிகாலை முதல் அத்தியாவசியமற்ற பயணங்களைத் தடை செய்யும் வகையில் அறிவிக்கப்பட்ட அடையாள அட்டை இறுதி இலக்கத்தின் பிரகாரம் பயணக் கட்டுப்பாடு அமுலுக்கு வரும்.

அத்துடன், தினமும் இரவு 11 மணி முதல் அதிகாலை 4 மணிவரை ஊரடங்கை ஒத்த பயணக் கட்டுப்பாடு நடைமுறையில் இருக்கும் எனவும் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண கூறினார்.

இன்று திங்கட்கிழமை முதல் பயணக் கட்டுப்பாடுகள் இல்லாதபோது, ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர், தனது தேசிய அடையாள அட்டையின் கடைசி இலக்கத்தின் அடிப்படையில் வீட்டிலிருந்து வெளியே செல்லலாம்.

ஒற்றை எண்கள் (1, 3, 5, 7, 9) உள்ளவர்கள் ஒற்றை இலக்க நாட்களில் வெளியே செல்லலாம். மற்றும் இரட்டை எண்கள் (0, 2, 4, 6, 8) உள்ளவர்கள் இரட்டை இலக்க நாட்களில் வெளியே செல்லலாம்.

உதாரணத்துக்கு இன்று 17ஆம் திகதி ஒற்றை இலக்க நாளாகும். இதன் பிரகாரம் இன்று காலை முதல் இரவு 11 மணி வரை ஒற்றை இலக்கத்தை அடையாள அட்டை இறுதியில் கொண்டுள்ளவர்கள் குடும்பத்தில் ஒருவர் வெளியே செல்ல முடியும்.

மே 31 வரை பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படாத நேரங்களில் மீண்டும் இவ்வாறான அடையாள அட்டை இறுதி இலக்கத்தின்படியான நடமாட்ட அனுமதி செயற்பாட்டில் இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஞா)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வவுனியா வடக்கு மன்னகுளம் பகுதி தொல்லியல் திணைக்களத்தால் ஆக்கிரமிப்பு

(வவுனியா)

வவுனியா வடக்கு பிரதேச செயலகத் திற்குட்பட்ட மன்னகுளம் பகுதியில் பழைய செங்கல் இடிபாடுகளுடன் கூடிய பௌத்த வழிபாடு இடம்பெற்றமைக்கான ஆதாரம் இருப்பதாக தொல்லியல் திணைக்களம் நேற்று தகவல் வெளியிட்டுள்ளது.

வவுனியா வடக்கு பிரதேச செயலகம் 255 B கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட மன்னகுளம்பகுதியில் தொல்பொருள் சின்னங்களை கொண்ட ஒரு தளம் காணப்படுவதாக சிங்க ரெஜிமென்டின் 16 ஆவது படைபிரிவின் கட்டளை அதிகாரியின் அறிவிப்பை தொடர்ந்து வவுனியா தொல்பொருள் அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் குழுவினரால் ஆய்வு மேற்கொள்ளப் பட்டிருந்தது.



குறித்த பகுதியில் 60-70 செ.மீ உயரத்திற்கு இடைப்பட்ட 12 கற்தூண்களை கொண்ட கட்ட அமைப்பும் அதில் சிங்கள எழுத்தினால் பூஜை தொடர்பாக எழுதப்பட்டிருப்பதாகவும் கி.மு 8,9 ஆம் நூற்றாண்டுகளுக்குரியது எனவும், அங்கு பழைய கட்டடங்களுக்கான செங்கல் மற்றும் ஓடுகள் இருப்பதாகவும் இக் கட்டம் 50 சதுர மீற்றர் பரப்பளவை கொண்டதாக இருந்திருக்கலாம் எனவும் தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் கூறியுள்ளனர்.

வவுனியா வடக்கில் வெடுக்குநாறி மலை, கோடலிபறிச்சான் என தொடர்ந்து தற்போது மன்னகுளம் பகுதியையும் தொல்லியல் திணைக்களம் உரிமை கோரியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஞா-299)


ONLINE SEMINAR
தமிழ் மொழியிலான கலந்துரையாடல்
STUDY MEDICINE IN CHINA
on 15th MAY 2021 at 10.00am
மேலதிக தொடர்புகளுக்கு Dr. தேவா
Mob : 076 764 6888 Tel : 011 588 2896
(6847)
Authorised agent in Sri Lanka
BYF EDUCATION (PVT) LTD
2C, 1/2, Charles Place, Dehiwala, Sri Lanka
www.byfedulk.com



வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
அசாதாரண சூழ்நிலையிலும் அனைத்து நாடுகளுக்கும் வழமைபோல் 100% பாதுகாப்புடன் எமது சேவைகள் நடைபெறுகின்றது.
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 6113
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
இல.01, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 3536
அருள்
இ.போ.ச டிப்போ எதிரில், பருத்தித்துறை.
இல.01, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி.
இல.01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி.
தொ.பே:- 076 443 1576
(C-2156)



ஊர் கோழிக்குஞ்சு விற்பனைக்கு
ஒரு மாதம் நிறைந்த நல்லின ஊர் கோழிக் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு.
[ கழுத்துவெட்டியும் உண்டு ]
விலை - 185 ரூபாய்
(6889)
077 477 5603


# பாராளுமன்றம் செல்ல ரிஷாத்துக்கு அனுமதி

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களான ரிஷாத் பதியுதீன் மற்றும் பிரேமலால் ஜயசேகர ஆகியோர் விரும்பினால் பாராளுமன்ற அமர்வில் கலந்து கொள்ள சபாநாயகர் அனுமதி அளித்துள்ளார்.

இது தொடர்பாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் மற்றும் சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்திற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற படைக்கள சேவிதர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு 3 மாத தடுப்பு காவலில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்.

அதேபோல், கடந்த 2015ஆம் ஆண்டு இடம்பெற்ற கொலைச் சம்பவம் தொடர்பில் இரத்தினபுரி மேல் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்ட பிரேமலால் ஜயசேகரவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா)


காணி விற்பனை
யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட ( யாழ். நகரில் இருந்து 1 1/2 Km தூரம் ) ஓட்டுமடம் சந்தி, மானிப்பாய் வீதி, முதலாம் ஒழுங்கையில் 15 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
( 2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.)
1 பரப்பின் விலை 6 இலட்சம்.
(6890)
077 288 0152
077 505 8561
074 075 4204


## மரண அறிவித்தல்

மண்ணில் 21 – 03 – 1947



விண்ணில் 15 – 05 – 2021

### இராசம்மா துரைச்சாமி

பாரதி வீதி, பத்தமேனி, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசம்மா துரைச்சாமி நேற்று முன்தினம் (15.05.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராமன் - வள்ளி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற துரைச்சாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராஜரஞ்சன் (ரஞ்சன்), ஸ்ரீரஞ்சன் (சிறி) மற்றும் ஜீவரஞ்சன் (பாபு), ஜெயரஞ்சன் (கோபு), உதயரஞ்சன் (உதயன்), இதயரஞ்சன் (சுதன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கமலராணி (ஆசிரியை - யா/அச்சுவேலி இரத்தினேஸ்வரி வித்தியாலயம்), லக்கிராணி, யசோதினி (முன்பள்ளி ஆசிரியை), மஞ்சுளா மற்றும் ஜெயச்சந்திரிகா (ஆசிரியை - யா/ உடுப்பிட்டி சைவப்பிரகாச வித்தியாலயம்) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.05.2021) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பத்தமேனி தீத்தாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(6885)

பாரதி வீதி, பத்தமேனி, அச்சுவேலி.

076 547 7722

தகவல்:- குடும்பத்தினர்


அண்ணா EXPRESS
விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
லண்டன் 1000/=
070 3305500
077 888 9388
(C-2134)
976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்
சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை
பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை
மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)



விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-1000/=Kg
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி
(C-2133)
0768226240 DHL



சிறுநீரகம் தேவை
32 வயதுடைய A+ குருதி வகையைச் சேர்ந்த ஆண் சிறுநீரக நோயாளி ஒருவருக்கு A+ அல்லது A-, O+ அல்லது O- வகையை உடைய சிறுநீரகத்தைத் தானமாக வழங்கக்கூடியவர் தொடர்பு கொள்ளவும்.
(6858)
தொடர்புக்கு : Sanju
076 531 4995
075 576 0264


#### அத்தியாவசிய பணிக்காக

# ரயில்கள் சேவை இன்று இயங்கும்

(கொழும்பு)

இன்று தொடக்கம் அத்தியாவசிய பணிக்காகச் செல்லும் பயணிகளுக்காக விசேட ரயில்கள் சிலவற்றை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

குறித்த ரயில்களில் தொழிலுக்குச் செல்பவர்கள் மாத்திரமே பயணிக்க முடியும் என ரயில்வே பிரதி முகாமையாளர் காமினி செனவிரத்ன தெரிவித்தார்.

சுமார் 51 ரயில்கள் இன்று இயக்கப்பட உள்ளதாகவும் மாலையிலும் ரயில்கள் இயக்கப்பட உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தொழிலுக்காகச் செல்லும் பயணிகளுக்காக நாளை தொடக்கம் பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

பயணிகளின் தேவைக்கு ஏற்ப மேலதிக பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்த திட்டமிட்டுள்ளதாக அதன் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்தார். (ஞா)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.05.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org